திராவிடநாடு

10–3–63 | வார வெளியீடு | விலை 16 காசு

நினைவு கொள்வீர்

—ந. பொ. கிருட்டினன்—

கால்வைத்துப் பின்வாங்கிச் சென்ற சீனன்
கண்ணியத்தை மேற்கொண்டா(ன்) னென்று நாமும்
தாழ்போட்டு உறங்கிவிடக் கூடா(து) தென்றும்
தன்கையில் பலமதனை மேலும் வலுக்கக்,

கால்காசு ஆனாலும் ஒன்று சேர்த்துக்
கயவனுக்குக் குழிதோண்டக் கொடுக்க வேண்டி(ய)
சூழ்நிலையில் இந்நாட்டார் இருப்ப தாலே
சுறுசுறுப்பை ஒருபோதும் இழந்தி டாதீர்!

வையகத்தார் இவன்செய்த 'தில்லு முல்லை'
வாய்விட்டு வசைமொழிந்தும் உணர்வு இன்றி
நயவஞ்சம், நஞ்சுச்சொல் கற்ற சீனன்
நம்மனைக்குக் கொள்ளிவைத்தான்; நெய்யும்
வார்த்தான்

பயனிழந்தோம் 'கொழும்பு மாநாட்டு' முடிவிலென்றால்
பச்சோந்தி எப்பொழுதும் நமது நாட்டை
வயப்படுத்தக் காத்திருப்பான் மறந்தி டாதீர்!
வையகத்தீர்! தன்மானம் நினைவு கொள்வீர்!

தங்கையம்மா நீ

சற்று நில்லுங்கள்......!

இக்கதையைப் படித்து முடித்த பின்...... தமிழ்ப் பெண் இவள்தானா? தமிழன் நெறி இதுதானா? தமிழ்ப் பண்பாடு இப்படித்தானா? என்றெல்லாம் கேட்டு என்னைத் திகைக்கவைக்க வேண்டாம்.

இப்படி நடக்கலாமா? என்று கேட்பதைவிட, இப்படியும் நடக்குமா? என்று வினா எழுப்புவதைவிட, "ஏன் இப்படி நடக்காது?; ஏன் இப்படி நடக்கக்கூடாது" என்று கேட்டுப் பாருங்கள். விடை கிடைக்கும். கிடைக்கும் விடை, 'கமலா'க்களுக்கும், 'தேவன்'களுக்கும் கிடைக்கும் வெற்றி, தோல்வியே தவிர எனக்கொன்றும் இல்லை.

இனித் தொடருங்கள்......

"அவள் எனக்கு அத்தை மகள்; அவளுக்கு நான் அம்மான் மகன். அம்மான் மகன் அத்தை மகளை மணக்கக் கூடாதாம்.

வீணையை மீட்க விரல்களுக்குத் தடை!

வேலெடுத்து விளையாட வீரனுக்குத் தடை!!

ஆமாம்! கமலாவை மணக்கும் தகுதி எனக்குக் கிடையாதாம். உறவிருந்தும், உள்ளம் ஒன்றுபட்டும், மணம் கொள்ள மட்டும் என் மாமா தடுக்கிறார். அந்தத் தகுதி எனக்கு இல்லை என்கிறார். அவளுக்கு நான், எனக்கு அவள், என்று பிறந்தபோதே போட்ட முடியை என் மாமா அவிழ்க்க முயற்சிக்கின்றார் இல்லை......இல்லை...... அறுக்க விரும்புகிறார்.

நாளை மறுநாள் அவள் மற்றவனுக்கு மனைவி. ஐயோ! கொடுமை! கொடுமை!!......"

"என்ன அத்தான்" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டான் தேவன். கமலாவைக் கண்டதும் அவன் உதடுகள் துடித்தன; உள்ளம் அழுதது; கண்கள் கலங்கின.

கமலா குனிந்த தலை நிமிராமல் நின்றாள்.

"அத்தான்"

"........."

"அத்தான்" கமலா அழைத்தாள்

இனிமேல் எப்போது இத்தகைய பரிவோடும், பாசத்தோடும் அழைக்கப் போகின்றோம்......அழைக்க முடியும் என்று எண்ணும்போது. அவள் உள்ளம் எரிந்து சாம்பலாகியது.

"என்ன அத்தான்! கூப்பிடக் கூப்பிடப் பேசாமல் இருக்கிறீர்கள்" கமலாவின் வாயிலிருந்த சொற்கள் அழுகையைத் துணையழைத்து வெளி வந்தன.

புலவர்-அரி-மதி

"இல்லை, கமலா; நாளை......நாளை மறுநாள்......எண்ணிப் பார்!

நீ மற்றவன் மனைவி. பிறகு இந்த 'அத்தான்' ஆராதனையும், அன்பு அபிஷேகமும் இந்த ஓட்டைக் கோயில் பிள்ளையாருக்கு எங்கே கிடைக்கப் போகின்றது......"

"நான் என்ன செய்வேன் அத்தான்? அப்பாவின் கோபம் உங்களுக்குத் தெரியாதா? அந்தப் பாளயத்து மாப்பிள்ளை பெரிய பணக்காரனும். அம்மாவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள்.

"அத்தான்! நான் என்னத்தான் செய்வேன்" கமலா பெருமூச்சுவிட்டாள்.

"கமலா! உனக்கு நினைவு இருக்கிறதா? அன்றொரு நாள் என் மாமா மகாதேவன் இறந்த செய்தி கேட்டு எல்லோரும் வேப்பூருக்குச் சென்று விட்டனர். நாம் இருவரும் தனியாக விடப்பட்டோம்.........

கமலாவின் கண்களில் நீர் முட்டியது. விசும்பல் ஒலி கேட்டது.

"அந்த நினைவெல்லாம் ஏனத்தான் இப்போது. சிறு வயதில் மணலில் வீடு கட்டிக் கணவன் மனைவி விளையாடிய அந்த பிஞ்சுக் காலம் முதல்... ......" கமலாவால் தொடர முடியவில்லை.

......உறங்குவதுபோல் பாசாங்கு செய்த என் நெற்றியில் நாமம்போட நீ வந்ததும், உன் மலர்க் கரங்களைப் பற்றி நான் மார்போடு அணைத்துக் கொண்டதும், மறக்கக்கூடிய நிகழ்ச்சிகளா?

என் மடியில் தலைவைத்து நீ படுத்துக்கொண்டிருக்க விடிய விடிய என்னென்னமோ பேசிக் கட்டாத கோட்டைகள் எல்லாம் கட்டினோமே, அதைத்தான் மறக்கமுடியுமா?

திருமணம் செய்துகொண்டு, பிள்ளைகள் எல்லாம் பெற்றுப் பெயர் வைத்து, குடும்பம் நடத்தினோமே, அந்த ஒரே இரவில்; அந்த இரவுதான் நம் மனதில் இருந்து மறையுமா கமலா?

மணந்தால் உங்களையே மணப்பேன்; இல்லையேல் இறப்பேன் என்று நீ உறுதி செய்ய, நானும் அதை உறுதிப்படுத்த உன கைமேல் அடித்து ஒப்புதல் செய்தேனே, அதைத்தான் மறக்க முடியுமா......?"

தேவனின் உதடுகள் துடித்தன. கோடைகால மழைபோல அவன்

வாயில் இருந்து சொற்கள் வெளி வந்தன.

வாழத் துடிக்கும் இரு உள்ளங்கள், எதிர்காலத் துன்பப் புயலின் கொடுமையை எண்ணி...எண்ணி உருகின.

மாரிச்சாமி உடையாரின் கடைசி மகள்தான் கமலா. கமலாவின் தாயார் பொன்னம்மாவுக்குத் தன் அண்ணன் மகன் தேவனுக்குத்தான் கமலாவைத் தரவேண்டும் என்ற ஆசை உண்டு. மாரிச்சாமி உடையாருக்கோ பாளயத்தில் உள்ள ஒரு பணக்கார மாப்பிள்ளைக்குத் தரவேண்டும் என்ற முடிவான எண்ணம் 'சாதி சாதியோடு சேரவேண்டும்' என்ற தத்துவவாதி அவர். விளையாட்டாகவோ, அல்லது வாய் தவறியோ ஒன்றைச்சொல்லிவிட்டாலும், அதை முடித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்.

கோபத்தில் அவர் ஓர் இமயமலை.

கோபத்தில் அவர், நான்கும் மூன்றும் எட்டு என்று சொல்லிவிட்டால், அதை ஏழு என்று மறுப்பவர்கள் யாரும் இருக்கக்கூடாது. அப்படித் தன்னை மறுத்துச் சொல்வது தன் மானத்திற்குக் குறைவு என்று எண்ணும் சுபாவம் கொண்டவர் அவர்.

தேவனுக்கும் கமலாவுக்கும் உள்ள உள்ளத் தொடர்பு உடையாருக்குத் தெளிவாகத் தெரியும். அதனால்தான் திருமணத்தை வெகு விரைவில் முடிவு செய்துவிட்டார்.

"என்னங்க! நல்லா யோசிச்சுப் பாருங்க. தேவனுக்கு என்னங்க குறை. படிச்சிருக்கான். நல்ல குணம் இருக்கு......" பொன்னம்மாளால் எச்சிலைக்கூட விழுங்கமுடியவில்லை. பயம் தொண்டையைக் காயவைத்துவிட்டது; நாக்கையும் உள்ளே இழுக்கிறது.

"ஏண்டி நிறுத்திட்டே. அவங்க இரண்டு பேரும் காதலிக்கருங்கன்னு சொல்லப் போறே.

இந்தாடி! இந்தக் காலத்திலே தேவையில்லாத படிப்பு, பண்பு, காதல் இதெல்லாம் இருக்குன்னு சொல்றே. முக்கியத் தேவையான... முதல் கடவுளான பணம் மட்டும் இல்லையேடி..

சாதி சாதியோடுதாண்டி சேரணும், உடையார் அங்கிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்தார்

"வந்து... வந்து... "பொன்னம்மாள் வாயிலிருந்து ஏதோ வெளிவரத் துடித்தது.

"ஏய் பொன்னி......"

பொன்னம்மா நடுநடுங்கிவிட்டாள்.

காதலைப்பத்தி எனக்கும் தெரியும். அதெல்லாம் குழந்தைங்க விளையாடுற, பொம்மை விளையாட்டுடி. காதல் ஒரு காப்பி மாதிரி. அது வாலிப உற்சாகத்திற்கு அப்படி 'ஜாலியா' சாப்பிடவேண்டியதுதான். ஆனு, அதுவே சாப்பாடு ஆகமுடியுமா?"

எப்பவோ ஒரு புத்தகத்தில் படித்ததைச் சொல்லிவிட்ட திருப்தி உடையார் முகத்தில் பளிச்சிட்டது.

எதைச் சொல்லியும் மாற்றமுடியாது என்ற முடிவோடு பொன்னம்மா உள்ளே சென்றுர்கள்.

"காதலாம் காதல்" என்ற ஒலி பொன்னம்மாளின் காதில் தெளிவாகக் கேட்டது.

"என்ன கமலா! அப்படியே சிலையாக மாறிவிட்டாய்."

"ஒன்றுமில்லை அத்தான். வாழ்வின் முடிவுரையில் நிற்கும் நான் முன்னுரைகளைப் பற்றிக் கொஞ்சம் நினைத்துப் பார்த்தேன்.

இந்தாங்க அத்தான். திரு......ம...ணப்..." கமலாவின் உணர்வே துடித்துவிட்டது.

தேவன் கமலாவிடமிருந்து பெற்ற பத்திரிகையைப் பிரித்தான்.

"பேட்டை மாணிக்க உடையாரின் மகள் செல்வி கமலாவுக்கும், பாளயம் குருசாமி உடையாரின் மகன் செல்வன் முத்துக் குமரனுக்கும்..."

அதற்குமேல் தேவனல் படிக்கவும் முடியவில்லை; பார்க்கவும் முடியவில்லை.

'கமலா" தேவன் 'ஓ' எனக் கதறிவிட்டான். கமலா குனிந்த தலை நிமிரவில்லை. அவளின் கண்ணீரால் அவள் மேலாடையெல்லாம் நனைந்துவிட்டது.

யார் யாரைத் தேற்றுவது?

"கல்யாணத்திற்கு மறக்காமல் வந்து..." அழுகை தொடர்ந்தது.

....

தேவன் சிலையானுன்.

"வருகிறேன் அத்தான்" கமலா எழுந்தாள்.

எவ்வளவு நேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே நிற்பது!!

"போய் வா! க...ம...லா"

திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றுள் கமலா.

நீண்டு தெரியும் ஒற்றையடிப் பாதையை வெறிக்கப் பார்த்துக் கொண்டே நின்றுன் தேவன்.

மெல்லக் காற்று வீசியது.

கல்யாணம் எல்லாம் வெகு சிறப்பாக முடிந்த வெற்றிக்களிப்போடு; உடையார் பொன்னம்மாவைப் பார்த்தார்:

"ஏங்க! மாப்பிள்ளை காருகேட்டாரே, அது என்னுச்சு"

"காரு இல்லேடி; 'மோட்டர்பை'க் கேட்டாரு. 'ஆர்டர்' கொடுத்து இவ்வளவு நாளாச்சு; இன்னும் வர்லே... வர்லேன்ருன் கடைக்காரன். அதெல்லாம் நம்ம மாப்பிள்ளை சொன்னு கேட்பாரு. ஆகவேண்டிய காரியத்தை எல்லாம் பாருடி."

"ஏங்க! அதையும் இன்னிக்கே வச்சுக்கணுமா என்ன?"

"யாருடி இவ! அதெல்லாம் நம்ம காலம்டி, மாப்பிள்ளைவேற நாளைக்கே ஊருக்குப் போகணும்னு சொல்ருரு. அதனல் இன்னைக்கு இராத்திரிக்கே இதையும் நடத்திட்டா, நாளைக்குக் கொடுக்கவேண்டியதெல்லாம் கொடுத்து, கூட்டி அனுப்பிடலாம்."

'சரிங்க' பொன்னம்மாள் ஏதோ நடமாடினுர்கள்.

புதிய கட்டில்; பூச்சரங்களின் புது மணம்; மலர்கள் தூவப்பட்ட மஞ்சம்.

கமலாவின் உள்ளம்போல் புகையும் ஊதுவத்தி ஒருபுறம்; பழவகைகள், பால் செம்பு மற்றெருருபுறம்.

கமலாவின் உடல் ஒரு மூலையில் காட்சி தருகிறது. அவள் உயிரும், உள்ளமும் 'தேவனி'ன்திருக்கோயிலை வலம் வந்தன.

"அவர்...இந்நேரம்......"

கமலா திடுக்கிட்டாள். அவளின் இதயவானில் ஏதோ ஓர் நினைவு மின்னல் பளிச்சிட்டது. தான் மற்றவரின் மனைவி என்ற நினைவு அவளுக்கு வராமற்போகவில்லை.

"எப்படியும் கட்டியவருக்கு மனைவி என்ற கடமையில் இருந்து தவறக் கூடாது"

கமலாவின் உறுதியான முடிவு இது.

பாளயத்து மாப்பிள்ளை முத்து' புத்தாடை அணிந்து புன்னகை முகத்தோடு, பூரிக்கும் உளத்தோடு வந்தார்.

"மாமா"

"என்ன மாப்பிள்ளே"

"எங்கே மாமா மோட்டர் பைக்" முத்து கிண்டலாகக் கேட்டான்.

"மாப்பிள்ளே! தப்பா நினைச்சுக் காதிங்க. நீங்க கேட்ட உடனே 'ஆர்டர்' கொடுத்திட்டேன். இன்னும் வரலேன்னு கடைக்காரன் சொல்ருன். பத்து நாளில் வந்துடும். எடுத்து கிட்டுப் போகலாம்"

"ஐ ஆம் வெரி சாரி மாமா"

உடையாரின் உடலே ஆடிவிட்டது.

"என்ன மாப்பிள்ளே சொல்றிங்க?"

"என்னே மன்னிச்சுடுங்க, மிஸ்டர் உடையார்"

உடையாரின் கண்கள் சிவக்கத் தொடங்கின.

"முடியிலேன்னு அப்பவே சொல்லி இருக்கணும். இப்போ எனக்கு 'மோட்டார் பைக்' வேணும். இல்லேன்னு இப்பவே நான் ஊருக்குப் போறேன்.

உங்க நிலேக்குத் தகுந்தபடி சின்ன இடமா பார்த்திருந்தா இந்த கஷ்டம் எல்லாம் இருக்காது பாருங்க.

மிஸ்டர் உடையார்! சாதி சாதியோடத்தான் சேரணும். ஏன்? உங்களுக்தே இதுகூடத் தெரிஞ்சு இருக்கணுமே."

உடையாருக்கு எங்கோ சுரீர் என்றது.

"மாப்பிள்ளே! கடைசியாச் சொல்றேன். நடக்கவேண்டிய நல்ல காரியம் தடங்கல் இல்லாம நடக்கட்டும்......"

உடையாரின் பொறுமையைக் கண்டு பொன்னம்மா அம்மாளுக்கே ஆச்சரியமா இருந்தது.

"அதெல்லாம் முடியாது......"

"டேய் முத்து"

உடையாருக்கு வரவேண்டிய குணம் வந்துவிட்டது. பொன்னம்மாளுக்கு வீடே தலேகீழாய்ச் சுழன்றது.

"மரியாதையாப் பேசுங்க! இதெல்லாம் முன்னமே நினேச்சுப் பார்த்திருக்க வேணும். எவனுவது பிச்சைக்காரப் பசங்க தலேயிலே உங்க பெண்ணே ......"முத்து முடிப்பதற்குள் அவன் முகம் வீங்கிவிட்டது.

"டேய்! யாருடா அங்கே. போய்க் கூட்டயாங்கடா அந்தத் தேவனே"

வீங்கிய முகத்தில் ஏதோ ஒரு மலர்ச்சி தோன்றியது. தேவன் அழைத்துவரப்பட்டான். சவக்களே படிந்திருந்த அவன் முகத்தைக் கண்டு பொன்னம்மாளின் கண்கள் கலங்கின.

"டேய் தேவா! நீதாண்டா கமலாவோட புருஷன். இன்னேக்கு...... இல்லே இல்லே இப்பவே உங்களுக்கு சாந்தி முகூர்த்தம்டா.

"போடா போ! கமலா காத்துக் கிட்டிருப்பா. இன்னுமா போகல்லே? என்னேத் தெரியுமில்லே. ஹும்! போ மாப்பிள்ளே"

தேவனேத்தான் இப்படிச் சொன்னுர்.

பொன்னம்மா வாயைத் திறந்து ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

"யாரும் ஒன்னும் பேசக்கூடாது. போ மாப்பிளே!

டேய் முத்து! உன்னுல் ஆனதை நீ பார்த்துக்கோடா. முத்து வேகமாகக் கிளம்பினுன். ஆனுல் அவன் முகத்தில் மட்டும் ஏதோ வெற்றிச் சிரிப்புத் தவழ்ந்தது.

"இன்னுமா மாப்பிளே போகலே" என்று உடையார் கேட்பதற்குள் தேவன் அறையில் நுழைந்துவிட்டான்.

"அத்தான்"

"கமலா"

நேரம் நகர்ந்தது. எவ்வளவோ பேசினுர்கள். கமலாவின் கண்ணில் அப்போதுதான் ஒரு கடிதம் வந்து விழுவது பட்டது. எடுத்துப் பிரித்துப் படித்தாள்.

"அன்புத் தங்கை கமலா! தேவா!...

கமலாவும் தேவனும் திடுக்கிட்டனர்.

...என்ன? திடுக்கிடுகின்றீர்களா? தாரமாகக்கொண்டவன் தங்கையே என்று அழைக்கின்ருனே என்று ஆச்சரியப்படுகிறீர்களா?

ஏழைக்குத்தான் தெரியும் ஏழையின் உள்ளம்.

ஆமாம் கமலா! நானும் உங்களேப் போல் ஒரு காதல் ஏழைதான்.

திருமணத்தின்போது அழும் இரண்டு ஜோடிக்கண்களேக் கண்டேன்.

எப்படி விசாரிக்கவேண்டுமோ அப்படி விசாரித்தேன். விளங்கவேண்டியது விளங்கியது.

தங்கையாக வேண்டியவளேத் தாரமாகக்கொண்ட தவறை உணர்ந்தேன். அதன் முடிவு...?

இன்று நான் ஒரு நாடகம் நடத்தினேன். கோபத்தின் இமயம் உன் தந்தை என்பதை அறிந்த எனக்கு வெற்றியும் கிடைத்தது.

காதலில் தோல்விகண்டவனுகிய நான் மற்ருெரு காதல் தோல்விக்குக் காரணமாக இருக்க விரும்பவில்லே.

தங்கையே! உன்னேச் சிறிது நேரமாவது தாரமாக நினேத்து இருந்தால் மன்னித்து மறந்துவிடு.

கமலா! தேவனும் நீயும் தேனும் சுவையும்போல் வாழவேண்டுமம்மா!

இதுதான் என் ஆசை.

உன் அண்ணன்

பாளேயம் முத்து.

ஜன்னல் வழியாகப் போட்டகடிதம் கமலாவின் கையில் கிடைத்ததைக் கண்ட களிப்போடு, ஒரு உருவம் இருளில் எங்கோ சென்றுகொண்டு இருந்தது.

"எங்கிருந்தாலும் வாழ்க" என்ற பாட்டு எங்கோ தூரத்தில் கேட்டது.

*

"Carry on! But Remember...!"

★

C. N. A.

On

Freedom of Speech

at the

RAJYA SABHA

★

[அறிஞர் அண்ணு அவர்கள் மாநிலங்கள் அவையில் 25-1-63 அன்று பிரிவினேத் தடைச் சட்ட மசோதா பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு ஆற்றிய ஆங்கிலப் பேருரையும் அதன் தமிழாக்கமும்]

விலே 75 காசுகள்

விபரங்கட்கு:

சுகுமாரன் பதிப்பகம்
80, சி. எஸ். செட்டித் தெரு
சின்ன காஞ்சிபுரம்.

கத்தும் கடல்!

மலர் 21] ஆண்டு சந்தா ரூ. 8 (10—3—1963) தனிப்பிரதி 16-காசு [இதழ் 28.

இயற்கை, கஞ்சத்தனம்கொண்டவளல்ல—ஓரளவு குறும்புத்தனம்கொண்டவள் என்று கூறலாம். பிடிவாத குணம்கொண்ட பெண்போன்றிருக்கும் இயற்கை கண்டு, கோபமோ சலிப்போகொண்டுவிட்டால், நட்டம் அவளுக்கு இல்லை. இயற்கை, அளிக்கவல்ல நலன்களைப் பெற்றிட வகை அறியாது, வாட்டமுற்றுக் கிடப்போரைக்கண்டு, எள்ளி நகைத்திடுமாம்.

பிழைத்திட மார்க்கம் இல்லையே என்று எண்ணி ஏங்குபவனைக்கண்டு, நிலம் எனும் நங்கை நகும் என்றார் வள்ளுவர். நிலத்துக்கு அவர் கூறியது, இயற்கை முழுதுக்கும் பொருந்தும்.

இயற்கையின் கூறுகளைக் கண்டறிந்து, பெறத்தக்கனவற்றைப் பெற்றுப் பயன் அடைய மனிதகுலம் அன்று தொட்டு எடுத்துக்கொண்ட முயற்சி, முற்றுப் பெற்றுவிடவில்லை; முற்றுப்பெற்றுவிடத்தக்கதும்அல்ல, அந்த முயற்சி. அறிவு வளரவளர, இயற்கையின் தன்மைகளைக் கண்டறியும் திறனும், பயன்பெறும் வகையும் வளர்ந்தவண்ணம் இருக்கும்.

காடுகள் நாடானதும், காட்டாறுகள் கழனிக்கு வளமளிக்கும் பாசனவகையானதும், இயற்கையை நல்வழிப்படுத்தியதாலேயேயாகும். இயற்கையை நங்கை என்றனரன்றோ! நங்கையர், வலிய நகைகாட்டி நிற்பரோ! நாணிக்கோணி நிற்பாரும், நெறித்த புருவம் காட்டுவோரும், நிரம்ப!! இயற்கையின் போக்கினைக் கண்டு பொறுமை இழந்துவிடாமல், முயன்று முயன்று, புதுப்புதுப் பயன்களைப் பாரினில் உள்ளோர் பெற்றனர்; பெற்றும் வருகின்றனர்.

இந்தத் துறையிலே விஞ்ஞான நுண்ணறிவு மெத்தப் பயன்பட்டுவருகிறது. புதுப்புதுப் பயன்படு பொருட்களைப் பெற்றிட உதவுகிறது.

கடல் நீர், உப்பு நிறைந்தது, உண்ணப் பயன்படுவதன்று. பருகும் நீரும் பாசன நீரும் போதுமான அளவு கிடைத்திடப் பெறுமல் பல்லோர் கஷ்டப்படுகின்றனர்—பாலையாகிக்கிடக்கிறது நிலம். இதனைக்கண்டு, இடி இடியெனச் சிரித்தபடி ஆழ்கடல் இருந்திடக் காண்கிறோம்,

தண்ணீர்! தண்ணீர்! எங்கும் தண்ணீர்! ஆனால் பருகிடத் துளியும் தண்ணீர் காணேன்!!—என்று கடல் குறித்துப் பாடினார் ஆங்கிலக் கவிஞர் ஒருவர்.

இங்கு கிடக்கிறது ஏராளமான தண்ணீர்—அங்கே உள்ளனர் நீர் தேடி நொந்திடும் மக்கள்—வெடித்துக் கிடக்கும் வயல்வெளிகள். கடல் நீர் மட்டும் குடிநீரானால்! வயலுக்கு ஏற்ற நீரானால்!!

இங்ஙனம் எண்ணுவதே ஏமாளித்தனம், அல்லது அவலச்சுவையைக் காட்டிடும்போக்கு என்ற கருத்தே நெடுங்காலமாக இருந்துவந்திருக்கிறது.

எனினும் நுண்ணறிவினர், இஃது ஏமாளித்தனமாகாது, முயன்று முடித்திடத்தக்கதே என்று, அவ்வப்போது எண்ணிவந்தனர்.

கடல் நீரும், உப்பங்கழி நீரும், நிலத்திலே பாய்ச்சி வைக்கப்பட்டு, வெப்பம் ஊட்டப்படுவதன்மூலம், உப்புப் பூத்திடச்செய்யும் முறை நெடுங்காலமாக உளது—தண்ணீரிலிருந்து உப்பைத் தனியாக்கி எடுத்திடும் முறை. அதுபோலவே உப்பு நீக்கப்பெற்ற தண்ணீரை ஏன் பெறுதல் இயலாது—அது குடிநீராக ஏன்மாறிடக் கூடாது, பாசனத்துக்கு ஏன் பயன்படக்கூடாது என்றெல்லாம், எண்ணத்தலைப்பட்டனர் — முயற்சிகளில் ஈடுபட்டனர்.

முப்புறம் கடல்சூழ்ந்துள்ள நமது தமிழகத்தில், இந்த நினைப்பு எழல் இயற்கை — இந்த முறையின் தேவையும் அதிகம். மக்கட்தொகை பெருகப்பெருக, புதுப்புது வயல்களாக, பாழ்நிலங்கள் மாற்றப்பட மாற்றப்பட, நீரின் தேவை மிகுதியாகிறது—எனவே, கடலைக் காணும்போது, இந்த நீர், குடிநீர் ஆனால், பாசனத்துக்கான நீர் ஆனால், என்று எண்ணத் தோன்றுகிறது.

வளர்ந்துள்ள விஞ்ஞான நுண்ணறிவு, இந்த எண்ணம் ஈடேற வழிசெய்தளிக்கிறது; வேண்டுவது நம்பிக்கையும் துணிவும்கொண்ட முயற்சியும் திட்டமிட்ட நடவடிக்கையுந்தான். எள்ளி நகையாடிய நாட்களும், எம்மால் ஆகாது என்று கைபிசைந்துகொண்ட நாட்களும் கடந்தகாலமாகிவிட்டதனை உணருகிறோம்.

கடல்நீர், குடிநீராகவும் பாசனவசதிக்கான நீராகவும் மாற்றப்படும் திட்டம் மேற்கொள்ளப்படவேண்டும் என்று, அரசியல் கட்சிகளிலேயே, நமது தி. மு. கழகம் தான் துணிந்து முதன்முதலாகக் கூறியதுடன், அந்த எண்ணத்தை வலியுறுத்தும் தீர்மானத்தையும் மாநாடுகளிலே நிறைவேற்றித், தேர்தல் திட்டத்திலேயும் இணைத்து அளித்தது.

காற்றை அளப்பாராம்! கயிறுகத் திரிப்பாராம் மணலை!! கடல் நீரைக் குடிநீராக்குவராம், கழகத்தார்!—என்று சிலர் நையாண்டி செய்தனர், அறிவோம். அவர்களின் அறிவு அந்த அளவுக்குத்தான் சென்றிட முடிந்தது!!

கடல்நீர், குடிநீராகவும் பாசனத்துக்கான நீராகவும், மாற்றிட இயலும்—முயற்சி நடந்துவருகிறது—வெற்றியும் கிட்டி இருக்கிறது, என்பதுபற்றிச் சின்னாட்களுக்கு முன்பு, அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

வெள்ளப் பெருக்கோ என்று மலைக்கத்தக்க மாநதிகள் பல உள்ள இடம் அமெரிக்கா — எனினும் அங்குகூட, ஆற்றுப் படுகைக்கு வெகு தொலைவிலே உள்ள பூபாகங்கள், வறண்டு கிடக்கின்றன; அந்த வறட்சியைப் போக்க, வழிகாணும் முயற்சியில் ஈடுபட்டதன் தொடர்பாகத்தான், கடல்நீர், குடிநீராகிட இயலும் என்பதனைக் கண்டறிந்துள்ளனர்.

அதுபற்றிக் கிடைத்துள்ள அறிவிப்பினை இங்கு அளிக்கின்றோம்.

> "அமெரிக்காவில் வறண்ட பகுதிகளில் உள்ள பெரிய நகரங்களுக்கு வேண்டிய நல்ல தண்ணீரில் ஒரு பகுதி கடலிலிருந்து கிடைக்கக்கூடிய காலம் விரைவில் ஏற்படலாம். உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீராக்கிக் கொடுக்கும் ஆய்வு அவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது. உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீர் ஆக்கிடும் செலவும், நெடுந் தூரத்திலிருந்து நல்ல தண்ணீரைக் கொண்டு வருவதற்கு ஆகும் செலவும் ஒன்றுபோல் இருக்கக்கூடிய நாள் விரைவில் வரலாம்............... உப்பு நீரை நல்ல நீராக மாற்றும் வேலையோடு மின்விசை உற்பத்தி வேலையையும் இணைத்து இரண்டும் ஒரே எந்திர அமைப்பில் நடக்கும்படி செய்தால், நகரங்களின் குடிதண்ணீர் வசதிக்கும் தொழிற்சாலைகளின் தண்ணீர்த் தேவைக்கும் சிக்கனமான முறையில் கடல் நீரிலிருந்து நல்லநீர் எடுத்து வழங்க முடியும்"

இந்த அறிவிப்பு, பிப்ரவரித் திங்கள் இரண்டாவது கிழமை, வாஷிங்டன் நகரிலிருந்து வெளிவந்திருக்கிறது.

இதனை அறிவித்திருப்பவர், அமெரிக்க உள்துறை உதவிச் செயலாளர்; ஜேம்ஸ். கே. கார் என்பார்.

செலவு இப்போது உள்ளதைவிடக் குறைவாகிட வழிகாண இயலும்—காண்பர்.

ஒவ்வொரு புதுமுறையும் துவக்கத்தில் பெரும் பொருட் செலவினையே மேற்கொள்ள வேண்டி இருந்தது—எளிய நிலையினர் பெறக்கூடிய வாய்ப்பு இல்லாது இருந்தது ஆனால், முயற்சி வெற்றி பெற்று முழுவடிவம் பெற்ற பிறகு, செலவு மட்டுப்பட்டுச், செல்வரேயன்றிப் பிறரும் பெற்றிடத்தக்க நிலை பிறந்தது.

அதுபோன்றே, இன்று பெரும் பொருள் செலவிட்டால் மட்டுமே, பெறத்தக்க இந்த வாய்ப்பு, படிப்படியாக, செலவு குறைந்து, பிறகு எவரும் எளிதில் பயன்பெறத் தக்கதான வடிவம் பெற்றிடும்; ஐயம் இல்லை.

எனவே இப்போதிருந்தே, விஞ்ஞான விற்பன்னர்களை, இந்தத் துறையிலே போதிய, சீரிய கவனம் செலுத்தும்படி, அரசு பணித்திட வேண்டும்.

ஆராய்ச்சி அளவுக்கேனும் இதற்கான திட்டம் மேற்கொள்ளப்படவேண்டும்.

சென்னை மாநகராட்சி மன்றத் தலைவர்; திரு. குசேலர் இது குறித்து, சில திங்களுக்கு முன்பு, விஞ்ஞான விற்பன்னர்களுடன் தொடர்புகொண்டு, ஆராய்ந்தார் என்பதனை அறிந்து, மகிழ்கிறோம்.

கழகத்தவர், மேயர்—எனவே, கனிவு காட்டி அவர் மேற்கொண்ட முயற்சிக்கு ஊக்கம் காட்டக்கூடாது என்று பிற கட்சியினர் எண்ணுவது, மிகமிகத் தவறு—அவ்விதமான போக்கு, கழகத்துக்கு அல்ல, நாட்டுக்கு நட்டத்தை மூட்டிவிடும்.

கடல் நீர், குடிநீராக,

கடல் நீர், பாசன நீராக

மட்டுமல்ல—கடலின் கொந்தளிப்பிலே, அலைகளின் வேகத்திலே, அளவிட முடியாத 'மின்சக்தி' அடங்கிக் கிடக்கிறது; அதனைக் கட்டுக்குள் இருந்து விடுவித்து வெளிக் கொணர்ந்தால், மின்சாரம் மிகுதியாகக் கிடைக்கும்.

கத்தும் கடலிலே மட்டுமல்ல, காய்கதிர்ச் செல்வனிடமிருந்தும், மின்சாரம் பெறலாம்.

இஸ்ரேல் நாட்டிலே சூரிய வெப்பம் கொண்டு இயங்கும் கருவிகளைச் சமைத்து வெற்றி கண்டுள்ளனர்.

இவைகளை எல்லாம் கண்டு, தெளிவும் துணிவும் கொண்டு, இயற்கையைத் தக்கவிதத்தில் அணுகி வளம்பல பெற்றிடவேண்டும்—இதற்கான திட்டமிட்டு, விஞ்ஞான விற்பன்னர்களைப் பணியாற்றிடும்படி அரசு அழைத்திடவேண்டும்.

"என்னிடம் உள்ள செல்வம் எவ்வளவோ உண்டு! அறியாமல், உழல்கின்றீரே!!" என்று எள்ளி நகையாடி, மாந்தரைக் கூவி அழைக்கும் போக்கிலேதான், கடல் கத்துகிறதுபோலும்!

போர்ப் பரிசு

ந. இறைவன் பி. ஏ.

ஏடெடுத்த புலவர்கள் பாடிய பாடல் களின் கருப்பொருள்கள் அனைத்தும் ஒன்றே! ஊரெடுத்த மன்றங்களில் உரையெடுத்த நல்லறிஞர் சொல்லிவந்த கருத்துகளின் கருப்பொருள்கள் அனைத்தும் ஒன்றே! யாழெடுத்த பாணன் பண்ணெடுத்துப் பாடிய பாடல் களின் கருப்பொருள்கள் அனைத் தும் ஒன்றே! ஆடும் விறலியர்கள் ஆடிக் காட்டிய ஆடல்களின் கருப் பொருள் அனைத்தும் ஒன்றே! வலி யப் பகை கொள்வதில்லை! வந்த பகைதன்னை வாழவிடுவதில்லை என் பதுதான் அந்தக் கருப்பொருள்.

கொவ்வைக் கனியிதழார் கூடிக் குழைகின்ற குளக்கரையில் ஒருத்தி; என்னேடி தோழி! எங்கேடி உன் னவர் என்று கேட்பாள். பின்னவள் பேசுவாள்; களத்தில் என்னவர் இந்நேரம் முன்னோடியாய் நின்று முடிப்பார் பகையென்று! பின்னந்தப் பின்னவள் முன்னவளை விளித்து, உன்னவர் எங்கேடி எனக் கேட் பாள். முன்னவள் சுருக்கென்று என்னவர் மட்டும் உன்னவர்க்கு இளைத்தவரா சொல்லென்பாள்.

தள்ளாடித் தடியூன்றி நடக்கின்ற தமிழ்த் தாயைச் சொல்லாடிச் சுவை காண்போம் என்றொருத்தி, அன் னாய்! நின்மகன் எங்கே எனக் கேட் பாள். என் மகனா என்று......புன லாடும் கண்ணில் கனலாட அவ் வன்னை........புலிக்குகையாம் என் வயிற்றில் பிறந்தவனை எலி என்று எண்ணினை நீ! எள்ளி நகைப்பது போல் எங்கென்று கேட்க வந்தாய்! போடி போ! போய்ப் பார்! போர் முனையில், புலி அஞ்ச அவன் பாய் வான் என்று நகைத்து இறுமாந்து நடப்பாள்.

இப்படி நாடே எழுந்ததனால்! நாடி வந்த பகைவர் ஓடி ஒளிவதற்குத் தேடினர் குகை!

உயிர் பிழைத்தால் போதுமென்று ஓடிய பகைவர்கள் விட்டுச் சென்ற அணிமணிகள் அத்தனையும் களத் தில் சிதறிக் கிடந்தன. பகையரசர் கள் முடிகளை மட்டும் தங்களின் வெற்றிப் பரிசாக வீரர்கள் எடுத்து வந்தனர். வீரர்கள் வீடு திரும்பி னர். வெற்றி வெற்றியென்று வீர முரசதிர்ந்தது. விழா விழாவென ஊர் பறை முழங்கிற்று. ஊர் வாயில்கள் தேர்போல் அலங்கரிக் கப்பட்டன. வருக வருகவென்று வரவேற்கும் வளைவுகள் வானை மறைத்தன. வாழ்க வாழ்கவென்ற வாழ்த்தொலி வானைப் பிளந்தன. பாவலர் தம் பாடல்களைப் பாணன் கை யாழ்பாடும். பாடலுக்கு விற லியர்கள் ஆடல் நிகழ்த்துவர். மலர் அள்ளி வீசுவதும்; மலர்மாலை அணி வதும் வீரர்களைக் கட்டியணைப்பது தும், கட்டி முத்தம் தருவதுவும் காணக் கண் கொள்ளாத காட்சியாம்.

வீரர்கள்மேல் மக்கள் மலர் தூவி மகிழ்வர். நாட்டில் பூத்த மலர் அத் தனையும் இதற்குத்தான் பூத்தனவோ என்பதுபோல் எங்கும் மலர்மாரி. மன்னன் ஏறிவந்த தேரெல்லாம் மலர்க் குவியல். குவிந்த மலர் தன்னை மன்னன் அருகுள்ளோர் மக்கள்மேல் அள்ளி எறிவார்கள். மன்னன்மேல் விழுந்த மலர் மங்கை யர்கள் குழல் முடிப்பர். வீரர்கள் தந்த மலர் வேல் விழியார் குழல் முடிப்பார். மலர் தூவும் மக்களுக்கு நன்றி சொல்வது போல் நகை பூத்த முகத்தோடு மன்னன் தேரிருந்தான்.

பாணர்கள் அனைவரும் போர் முனையில் மன்னன் காட்டிய வீரத்தை யாழிசைத்துக் கதை கதையாய்ப் பாடுவர். ஒப்பதுவும் மிக்கதுவும் அற்றதொரு வீரமென் பான் ஒரு பாணன், வீரத்தின் முழுப் பொருளே வேந்தனின் உருத்தானே எனப் புகழ்வான் மறு பாணன். கேட்டவர்கள் உடலெல்லாம் புல் லரிக்கும்வண்ணம் பாணர்கள் போர்ப் பரணியை இசையாக்கிப் பாடுவர். மக்கள் மன்றம் குழுக் குழு வாய்க் கூடி நின்று கேட்டு மகிழும்.

பாடுகின்ற பாணர்களுக்குப் பரி சாகப் பகையரசர் முடிகளை மன்னன் எடுத்தெடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தான். முடிகளைப் பரி சாகப் பெற்ற பாணர்கள் அந்த முடி களுக்கு உரிமையுடையவர்கள் களத்தில் அடைந்த முடிவுகளை விளக்கிக் கூறும்போது சிலர் சிரிப் பார்கள். சிலர் பரிதாபப்படுவார்கள். விறலியர்கள் அந்த முடிகளைத் தங்கள் தலையிலே அணிந்து ஆடுவர்.

பாராட்டாத நெஞ்சங்கள் இல்லை. பாமாலை தொடுக்காத பாவலர்கள் இல்லை. அந்தப் புகழ்ச்சிகளிலே எல்லாம் அவன் உள்ளம் நிறை வடைந்துவிடவில்லை என்பதை அவன் பார்வை காட்டியது. மக் கள் மன்றமே அவனைப் பார்த்தது.

ஆனால் அவன் கண்கள் யாரையோ தேடித் தேடி அலைந்தது. அவன் தேடிய அந்த உருவைத் தவிர, வேறு எல்லா உருவமும் அவனைப் பார்த்துப் புன்னகைத்தது. ஆனால் அவன் எதிர்பார்த்த புன்னகை கிடைக்காத ஏக்கம் அவன் முகத்தில் பளிச்சிட்டது.

களம்நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்த அவனைக் கடைக் கண்ணால் அவள் பார்க்க, சென்று வரவா என்று அவளை அவன் கேட்க; வென்று வரவா என்று கேளுங்கள் என்று அவள் சொல்ல; வென்று வந்தால் என்ன பரிசு கிடைக்குமோ என்று அவன் கேட்க, பரிசு தரும்போது பாருங்கள் என்று அவள் சொல்ல; அப்படியா? என்று; அவளைத் தளிரென அள்ளித் தமிழென அணைத்து முத்தமிட்டு; நான் பகைமுடித்து வரும்வரைக்கும் போதுமா இதுஎன்று அவன் கேட்க. பகைமுடித்து வாருங்கள் பதிலுக்கு பதில் தந்து பழிதீர்த்துக்கொள்கிறேன் என்று அவளது விழிகள் பேச, விடைபெற்றுச் சென்றானே, அவனைத்தான் தேடுகிறான்.

பாளைச் சிரிப்பால் வேளைக்கு வேளை விருந்துவைத்துப் பசியாற்றும் பாவையைக் காணாது துடியாய்த் துடித்தான். அவளெங்கே அவளெங்கே என்று கேட்டவாறு; பூ நாடி வந்த வண்டினைப்போல், காவில் அவளோடு அவளாகத் தானுடி மகிழ்ந்த இடமெல்லாம் சுற்றிச்சுற்றி வந்தான்.

அலைபுரள் கடலோ என்பான் கலைபுரள் கூந்தல்தொட்டு! அமிழ்தத்தின் ஊற்றோ என்பான் தமிழ் தவழும் இதழ்சுவைத்து. நெஞ்சொடு நெஞ்சணைத்து வஞ்சியைக்கொஞ்சுவான். இந்த நினைவுகள் அவன் உள்ளத்தில் தொல்லைகளாய்மூளும். பாவையர் இருவர் பேசுகின்ற பேச்சு அவனது செவிகளில் ஒலிக்கிறது. அதைக்கேட்பதற்காக அங்கேயே உட்கார்ந்துவிடுகிறான்.

எங்கிருந்து ஓடிவருகிறீர்கள்.

ஓடிவருகிறேனா? என்னடி சொல்கிறாய்!

பின்னென்ன நீங்கள் இப்பொழுது நடந்தா வந்தீர்கள்? அதிருக்கட்டும் ஏன் இப்படி மூச்சுவாங்குகிறது...! யாராவது கண்டுவிட்டார்களா? ஏன் இப்படி நாணப்படுகிறீர்கள். ஒரே புதுமையாக இருக்கிறதே தலைவி!

எல்லாமே புதுமைதாண்டி உனக்கு.

இவ்வளவு நேரமாக எங்கே போயிருந்தீர்கள். ஒளிக்காமல் சொல்லுங்கள். இல்லையேல்......

இல்லையேல் என்னடி, இல்லையேல்!

என்னைப் பார்க்கப்போவதாக அன்னையிடம் சொல்லி வந்திருக்கிறீர்களே. நீங்கள் என்னைப்பார்க்க வரவில்லை......என்ற உண்மையை நின் அன்னையின் செவிகளில் எட்டவைப்பேன். அவ்வளவுதான்... பிறகு பாரேன்.

தோழி! தயைசெய்து இந்தநிலையில் உண்மையை அன்னையிடம் சொல்லிவிடாதே.

நான் ஏன் சொல்லப்போகிறேன். உண்மை எனக்கு ஒளிவுமறைவின்றித் தெரிந்தாகவேண்டும். காவிற்குப்போனது முதல்...காதலன் வந்தது முதல்; காவியம் மலர்ந்தது வரை...அதற்காகத்தான் அப்படிப் பயமுறுத்தினேன்.

நான் காவிற்குப்போனது என்னவோ உண்மைதான் தோழி...... ஆனால்...!

அவன்மட்டும் காவிற்கு வரவில்லையாக்கும். என்ன உண்மை! இதுவல்லவா உண்மை.

உண்மையைச் சொன்னேன். நீ நம்பினால் நம்பு. இல்லையேல் போ. அதற்காக நடவாததெல்லாம் நடந்ததாகக் கற்பனை செய்தா கூற முடியும்!

எது தலைவி உண்மை. குங்குமம் கலைந்தது உண்மை. குழல்மலர் உதிர்ந்தது உண்மை. ஆடை சிதைந்தது உண்மை. அவன் காவிற்கு வராததுமட்டும் உண்மையிலும் உண்மை! இல்லையா தலைவி! இதுதானே கற்பனை கலவாத உண்மை.

அவன்தான் இவற்றையெல்லாம் கலைக்கவேண்டுமா என்ன?

அவள் கலைத்தான் என்று நான் சொன்னேன். தலைவி! அவனுக்கு எங்கே இவைகளைக் கலைக்கவேல் லாம் நேரம்! இவைகளை அவன் பார்த்துக்கூட இருக்கமாட்டான். பாவம். அவன்மீதா பழிபோடுவேன். இதழ்கனியில் கொடுத்துவைத்திருந்ததை எடுத்துக்கொண்டிருக்கும் போது குங்குமம் கலைந்திருக்கும். நிலைமீறிய நிலையில் அலைபுரள் கூந்தலில் அவனது கைகள் அலைந்த போழ்து கைபட்டுக் குழல்மலர் உதிர்ந்திருக்கும். இப்படித்தான் அவைகள் கலைந்திருக்குமே தவிர; அவன் ஏன் இவைகளைக் கலைக்கப் போகிறான்.

உன் கற்பனையே இனிக்கிறது தோழி!

கற்பனை எப்படித்தலைவி இனிக்கும். கற்பனையில் கலந்திருக்கும் உண்மை இனிக்கிறது என்று சொல்லுங்கள்—ஒப்புகிறேன்.

காற்றில்தாண்டி கலைந்தது. உனக்கு ஏன் இந்த வீண கற்பனையெல்லாம்.

பாவிமகன்...நீ காற்றின்மீது பழியைப்போட்டு என்னை ஏமாற்றப் போவது தெரியாமல்...என்னென்னவோ செய்துவிட்டான். அவன் தான் இப்படிக் காட்டிக்கொடுத்தான். இந்தக் காற்றுவது உன்னைக் காப்பாற்றக்கூடாதா? அது வேறு பல்லில்லாமல் உலாவருகிறது.

என்னடி உளறுகிறாய்!

நானா தலைவி உளறுகிறேன். ஆமாம் இந்தக் காற்றுக்குக் கூடவா உன்மீது இவ்வளவு ஆசை. குங்குமத்தைக் கலைத்தது. போகட்டும். குழல் மலரை உதிர்த்தது. மறப்போம். ஆடையைக் கலைத்தது. மன்னிப்போம்.

கன்னத்தைக் கடித்திருக்கிறதே! பல்பதிந்திருக்கிறதே! இதுகொடுமை அல்லவா? இதை நாம் எதிர்க்க வேண்டாமா தலைவி. இந்தக்காற்று இன்று உன் கன்னத்தைக் கடித்தது ....நாளை யார் யாரை என்னென்ன செய்யுமோ? வா தலைவி! ஊருக்குச் சொல்லுவோம்! உலகுக்கும் சொல்லுவோம். நீ சென்ற அந்தக் காவில் கன்னியர்கள் கன்னத்தைக் கவ்வும் கொடுங் காற்று உண்டென் பதை ஊருக்கும் உலகுக்கும் எச்சரிக்கை செய்வோம். என்ன, போவோமா தலைவி?

போடி! பொல்லாதவளாயிற்றே நீ! நானா தலைவி பொல்லாதவள். அவன் பொல்லாதவன். இல்லையேல் இப்படிக் கன்னத்தில் பல்பதிப்பானா? உன்னை என்னிடம் காட்டித்தான் கொடுப்பானா? போனது போகட்டும். கவலையை விடுங்கள். காதல் காவியத்தைச் சொல்லுங்கள்.

சொல்லவா...?

என்ன...எடுத்தவுடன் அள்ளவா என்று கேட்டான் தலைவி!

காதென்ன செவிடாடி! சொல்லவா என்று நான் கேட்டால், அள்ளவா என்று கேட்டான் என்கிறாயே?

காதல் கதை அள்ளவா? அணைக்கவா? என்ற சொல்லோடுதானே ஆரம்பம்ஆகுமென்று பார்த்ததேன். சரி! நீங்கள் சொல்லுங்கள். நான் காவிற்குச் செல்லுமுன் அவன் அங்கு காத்திருந்தாண்டி!

இது ஒன்றும் புதுமையில்லை. சொல்லுங்கள் தலைவி!

நான் காவில் தனிமையில் ஓரிடத்தில் நின்றேன். அவனும் வந்தான், பாவையே என்றான். பாவலரே என்று நான் சொன்னேன். அது எனக்கே கேட்கவில்லை. எங்கே அவனுக்குக் கேட்டிருக்கப் போகிறது!

நெருங்கி வந்தான். இதழினைச் சுட்டி இது என்ன 'கொவ்வையோ' என்றான். என்னவோ என்றேன். தாவே என்றான். தாவியே வந்தான். கனி! கனி என்றான். இல்லை இதழ்! இதழ்! என்றேன். மது! மது என்றான். எது! எது! என்றேன். இது இது, என்றான். இதழினை வெளுத்தான். விடு விடு என்றேன். பொறு! பொறு! என்றான். பொழுதும் புலர்ந்தது.

பிறகு என்னென்ன செய்தானோ? இதழிலேயே இவ்வளவு இன்பமா? பிறகு......

போடி அதையெல்லாம் என்னால் சொல்லமுடியாது. சொல்லவும் கூடாது. நெஞ்சில் நினைத்தாலே மெய் சிலிர்க்கிறது. நீ வேறு அதைச் சொல், இதைச் சொல் என்று உயிரை வாங்குகிறாயே! ஏதோ கொஞ்சம்தான் சொல்லுவேன். அவரே கேட்டால்கூடச் சில வற்றை நான் சொல்லமாட்டேன். சொல்ல முடியாதடி! எனக்கேகூடச் சிலவற்றை நினைத்துத்தான் பார்க்க முடிகிறது. சொல்லிப் பார்க்க முடிவதில்லை.

அப்படி இருக்க உனக்கு எப்படியடி முழுமையும் சொல்ல முடியும்? நானே நீ அவனைப் பார்த்தால்...... நான் உன்னிடம் சொன்னதெல்லாம் உனக்கு நினைவு வரும். நாணம் வரும். இதையெல்லாம் நீ தெரிந்து கொண்டாய் என்பது அவனுக்கு தெரிந்தால்...உன்னைப் பார்க்கின்ற போது அவன் நாணப் படவேண்டி வரும். எனவேதான் எனக்கும் அவனுக்கும் மட்டும் தெரிந்த சில வற்றை யாருக்கும் நான் சொல்லப் போவதில்லை. சொல்லெனக் கேட்பது முறையுமல்ல.

இதழை அவன் சுவைக்க இமையை நான் மூட நெடுநேரம் இருவருமே சிலையானோம். நெடுநேரம் சென்றதன்பின் நான் நினைவுற்றேன்; அவன் பிடியினின்றும் விடுவித்துக்கொண்டு ஓடினேன். அவனு விடுவான் தொடர்ந்தான். அவன் பாடினான் நானும் பாடினேன்! கேளேடி அதையும்!

பாடுங்கள் கேட்கிறேன்.

அவன்:

பாவையுடல் நானென்று
பசலைக் கொடி ஊடுவதேன்?

நான்:

மங்கை எந்தன் நிறமென்று
மாந்தளிர்கள் பாடுவதால்!

அவன்:

பல்வரிசை நானென்று
முல்லைமலர் ஊடுவதேன்?

நான்:

செவ்விதழ்கள் நானென்ற
கொவ்வைக்கனி பாடுவதால்

அவன்:

உன்னைப்போல் கொஞ்சுதற்கு
தன்னைப்போல் யாரென்று
கிளிகள் ஊடுவதேன்?

நான்:

என்னைப்போல் பாடுதற்கு
தன்னைப்போல் யாரென்று
குயில்கள் பாடுவதால்!

அவன்:

தான்பாட வேண்டுமென
ஒரு சிலம்பு ஊடுவதேன்?

நான்:

தன்பாட்டே சிறந்ததென்று
மறுசிலம்பு பாடுவதால்!

அவன்:

ஓடிவேன் ஓடிவேனென
உன்இடை ஊடுவதேன்?

நான்:

ஒடிப்பேன் ஒடிப்பேன்என
உன்உள்ளம் பாடுவதால்!

தோழி...யாரோ வருகின்ற காலடியோசை கேட்கிறதே! பாரேண்டி...! அவனேதான்... அவனேதான் தோழி! ஐயயோ இத்தனை நேரம் நாம் பேசியதெல்லாம்கூடக் கேட்டுக்கொண்டுதான் இருந்திருப்பானோ? வாடி......வாடி......!

இருவரும் ஓடி விடுகின்றனர். அவன் மட்டும் அங்கேயே நின்று அந்தக் காட்சியைச் சுவைத்துக் கொண்டு இருக்கிறான்.

இன்று இந்த நினைவுதான் அவனுடைய செவிகளில் யாரோ பேசுவதுபோல ஒலித்தது. அவளைக் காணவில்லை! அந்த இடமும் அந்த நினைவும் மட்டும் இருக்கிறது—அவனுடைய உள்ளத்தை வேல் கொண்டு தாக்குதற்கு. வேதனை நிரம்பிய உள்ளத்தோடு உட்கார்ந்திருந்தான்! அவன் பின்புறமாக வந்த அவள் அவனுடைய இரு கண்களையும் தன் இரு கைகளாலும் மூடுகிறாள். அவனுடைய நெஞ்சில் தேன் ஊற்றுத் தோன்றுகிறது. அவனை விட்டுவிட்டு அவள் ஓடுகிறாள் காவிலே! தொடர்கிறான் அவனும். அவன் அறியமாட்டான் என நினைந்து ஒரு கொடியில் அந்த பூங்கொடியாள் தன்னை மறைத்துக் கொண்டு நிற்கிறாள். அவனுக்கா தெரியாது. பூமியின் நடுவில் அவன் இருந்தாலும் பூமியைப் பிளந்தேனும் அவளை அள்ளி அணைத்து வருபவனாயிற்றே! மறைந்து நின்றவளைப் பார்த்துப் பாடுகிறான்:

அவன்:

வான்முகிலில் நிலவொளிந்தால்
வான்நிலவின் ஒளிபார்த்து
தேன்நிலவு இருக்குமிடம்
வையத்தார் தெளிவதுபோல்!
பூங்கொடியில் நீமறைந்தால்
காவியத்தில் புலவரெல்லாம்
கன்னியரைக் கொடியெனவே

சொன்னதை நினைவில்வைத்து
காவினில் கொடியலசி
கன்னியுன்னைக் கண்டிடுவேன்
கட்டிமுத்தம் தந்திடுவேன்!

அவள்:

காவியத்தில் புலவரெல்லாம்
காளையரைக் கொம்பெனவும்
கன்னியரைக் கொடியெனவும்
சொன்னதை நினைவில்வைத்து
கொம்பென உனைநினைந்து
கன்னிநான் உன்மார்பில்
கொடிபோல் படர்ந்திடுவேன்
கோலமெல்லாம் கண்டிடுவேன்!

அவன்:

காவியத்தில் புலவரெல்லாம்
கன்னியரைப் பூவெனவும்
காளையரை வண்டெனவும்
சொன்னதை நினைவில்வைத்து
வண்டென நான்வருவேன்
வண்ணமலர் தேன்குடிப்பேன்!

அவள்:

காவியத்தில் புலவரெல்லாம்
காளையரின் திண்தோளை
வானிடிக்கும் மலைகளென்று
சொன்னதை நினைவில்வைத்து
பெரும்மலை மீதினிலே
கருமுகில் மண்டுதல்போல்
காளையுந்தன் திண்தோளில்
கன்னிநான் சாய்ந்திடுவேன்
காவியம் எழுதுஎன்று!

அவன்:

கன்னியுந்தன் கண்வீச்சில்
காலத்தால் அழியாத
காவியம் எழுதிடுவேன்!

இருவரும்:

காவியம் எழுதிடுவோம்—காதல்
ஓவியம் வரைந்திடுவோம்!

ஓடிக்கொண்டே பாடலைப் பாடினார்கள். பாடலின் இன்பத்தை ஓடிக்கொண்டே காணமுடியாது ஆதலால்......ஓடிப்போய் அந்த இளந்தென்றலாளை அள்ளி அணைத்துக்கொண்டான். துள்ளித் துடித்துக்கொண்டிருந்த அவளை அவன் கைகள் மட்டும் அணைக்கவில்லை. எங்கே போர்ப்பரிசு! எங்கே போர்ப்பரிசு என்று கேட்டவண்ணம் அவன் அவள் கன்னத்திலே மாறி மாறி முத்தமிட்டதால் நாணமும் அவளை அணைத்தது.

சற்று நேரம் ஆக ஆக நாணம் விடைபெற்றது. பாவையும் விழி திறந்தாள். அவனது மார்பில் வேல் துளைத்த காயங்களைப் பார்த்து விழி நீர் சிந்தி ஏன் இவைகள் எல்லாம் எனக் கேட்டாள்!

பகைவர்கள் நஞ்சு பாய்ச்சிய வேலை நானே விரும்பித்தான் என் மார்பிலே ஏற்றுக்கொண்டேன். ஏன் தெரியுமா? எத்தனை பெரிய கொடிய நஞ்சானாலும் உன் இதழ் பட்டால் அமிழ்தாக மாறிவிடும் என்ற உண்மையை உலகுக்குக் காட்டத்தான். எங்கே நீ இந்தப் புண்ணிலே உள்ள நஞ்சையெல்லாம் இதழ்கனியால் எடுபார்ப்போம் என்று அவன் சொல்ல; எடுக்கின்றேன் எடுக்கின்றேன் என்று தன் கனியிதழால் அவள் அந்த புண்ணிலே முத்தமிட......இந்தப் புண் இன்னும் இரண்டே நாளில் ஆறிவிடும். அங்கே தோன்ற இருக்கும் உன் இதழ்தந்த வடுவை நான் எண்ணி எண்ணிப் பெருமைப்படுவேன்! போர்ப்பரிசு இதுவே!! வழக்கம்போல் தருகின்ற அன்புடப் பரிசு எங்கே என்று அவன் தன் இதழைக் காட்ட, அவள் நாணத்தின் மடியிலே விழுகிறாள். அவள் கண் இமை மூடுவதைப் பார்த்த மலர்களும் தங்கள் இதழ்களை மூடுகின்றன. பகைவர்கள் தந்த வெற்றி கூட அவனுக்குப் புதிதல்ல! பெரிதல்ல! அவள் தந்த போர்ப்பரிசு தான் அவன் நாளெல்லாம் எண்ணி எண்ணி இறுமாந்துக்கிடந்த புதுப் பரிசாகும்!

இருள், அவர்கள் உருவை மறைக்கிறது. ஆனால் அவர்களைப் பொறுத்தவரையில் இரவுமில்லை. பகலுமில்லை. இருளிலே மறைந்தவர்கள் என்னென்ன இன்பம் கண்டார்கள் என்பதைக் கேட்கத் துடிக்கிறீர்களா?

புறநானூற்றை எடுங்கள். அங்கே இதுபோல் வீரத்தலைவர்கள் எண்ணற்றோரைக் காணலாம். அகநானூற்றை எடுங்கள். அங்கே இது போல் இலக்கியத்துத் தலைவியர்கள் பலரைக் காணலாம். பொழுது புலர்ந்தால் புறத்திலே தீரமும், அந்தி வந்தால் அகத்திலே மகிழ்வும் கொஞ்சி விளையாடிய காலம் ஒன்று தமிழகத்திலே இருந்தது. அந்தக் காலத்துத் தலைவனையும் தலைவியையும்தான் இதுவரை கண்டு மகிழ்ந்தீர்கள். மீண்டும் அவர்களைக் காண வேண்டுமா...இதோ அவர்கள்...... இதனை உற்று நோக்கினால் புதுப் புது உருவிலே உங்களுக்கு அவர்கள் தோற்றம் அளிப்பார்கள். சற்றே பாருங்கள்...!

"வெடிவேய் கொள்வதுபோலவோடித்
தாவு புகளுமாவே பூவே
விலங்கிழை மகளிர் கூந்தல் கொண்ட
நரந்தப் பல்வாழ்க் கோதை சுற்றிய
ஐதமை பாணி வணர்கோட்டுச் சீறியாழ்க்
கைவார் நரம்பின் பாணர்ப் போக்கிய
நிரம்பா வியல்பிற் கரம்பைச் சீறூர்
நோக்கினர் செகுக்குங் காளை யூக்கி
வேலினிட்ட களிறு பெயர்த் தெண்ணின்
விண்ணவர் விசும்பின் மீனும்
தண் பெயலுறையும் உறையாற்றுவே"

—புறம் 302

✱

விற்பனையாளர்கட்கு:

அதிக இதழ் தேவைப்படுவோர் புதன் கிழமைக்குள் தெரியப்படுத்தவும்.

✱

சந்தாதாரர்கட்கு:

சந்தா முடிந்தவுடன் சந்தாவைப் புதுப்பிக்கும் சந்தாதாரர்கள் சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகி.

"ஒற்றை மாட்டு வண்டி"

திருத்துறைப் பூண்டியிலிருந்து கோடிக் கரை செல்லும் புகைவண்டியை, வேதாரணியத்தில் கண்ணன் வரவேற்கத் தவறியதே கிடையாது. அப்படி அவன் யாரையாவது வரவேற்க நிற்கிறானே என்றால், அப்படி அவன் அவன்ஒரு பெரிய மனிதனுமல்ல. அவன் ஒரு சாதாரண வாடகை வண்டியோட்டிதான்! புகைவண்டி வேதாரணியம் நிலையத்திற்கு வரத் தவறினாலும் கண்ணன் வரத் தவறியதே கிடையாது! கண்ணன் வரத் தவறினால் எப்படி அவன் வாழ்க்கையை ஓட்ட முடியும்?

என்றும்போல் அன்றும் கண்ணன் தன் ஒற்றை மாட்டு வண்டியை ஓட்டி வந்து அங்கு நிறுத்தியிருந்தான். வண்டி வரநேரம் இருந்ததால் பக்கத்தில் உள்ள பலகையில் உட்கார்ந்தபடியே தன் குடும்ப நிலைபற்றி எண்ணினான். தன்தாய் தள்ளாத வயதில் உடல்நலம் குன்றி மோசமான நிலையிலிருப்பதையும், தன்னால் மருந்துகூட வாங்கிக் கொடுக்க முடியவில்லையேயென்பது பற்றியும், உண்ண உணவு இல்லாமல் பட்டினியாகக் கிடப்பது பற்றியும், அன்றாட வாழ்க்கையை ஓட்ட வருமானம் தரக்கூடியஅந்த ஒற்றை மாட்டுக்குக்கூடத் தீனி வாங்கிப் போட முடியவில்லையே என்பது பற்றியும் எண்ணிக்கொண்டிருக்கும் பொழுது, "என்னண்ணே! இன்றைக்கு ஏதாவது வருமானம் கிடைச்சுதா?'' என்று கேட்டுக் கொண்டே பக்கத்திலமர்ந்தான், இன்னொரு வண்டிக்காரன்.

"இன்றைக்கொன்றும் சரியில்லை தம்பி! காலையிலிருந்து சாயங்காலம் வரை ஒரு கிராக்கிகூடக் கிடைக்கலை......ஒரு 'சிங்கள்' டிக்குக்கூட வழியில்லை தம்பி!'' கண்ணன் சொற்களில் அவனது வறுமையின் சாயல் வெளிப்பட்டது.

"எனக்கு நாலைந்து கிராக்கி கிடைச்சுதுண்ணே! உனக்கு கிடைக்கலைன்னா உன் மாடு, என் மாடு மாதிரியா இருக்கு! இப்படி எலும்புந் தோலுமா இருந்தா அவசரத்துக்கு போறவன் உன் வண்டியிலா ஏறுவான்! உன் வண்டியைப் பாரு...! நல்லா பாலிஷா 'பெயின்ட்' அழகாயிருந்தாத்தானே......! உன் வண்டியிலேயே சூரியனே குடியிருக்கே...! நல்ல வண்டியும் மாடும் வச்சிருக்கவனுக்கே நல்ல கிராக்கி

ச. கனகராசன்

கிடைக்கலை இந்தக் காலத்திலே; உன் வண்டியிலே எவன் ஏறுவான்...?''

"நான் என்னப்பா செய்வது? காசு கிடைச்சாத்தானே தீனி போடலாம்......மாடும் நல்லாயிருக்கும்... வண்டியையும் அழகா வச்சிருக்கலாம்...ஆமாம், இந்தக் காலத்திலே கண்ணுக்கு நல்லாயிருந்தாத்தான் நாலு பேரு மதிப்பாங்க....உனக்கும் என் மாதிரி நிலை ஏற்பட்டாத்தானே தெரியும்...நான் சொன்னா எப்படித் தெரியும் என் நிலை.....வாலிப முறுக்கிலே பரிகாசம் பண்றே''

"போண்ணே! உன் மூஞ்சியைப் பார்த்தாக்கூட எவனும் கூப்பிடமாட்டானே!''

"என்னமோ நான் கஷ்டப்பட வேண்டிய காலம் கஷ்டப்படுறேன். உனக்கென்னப்பா... சொல்றதைச் சொல்லிக்கோ...'' கண்ணனின் உள்ளத்தில் பெரும் வேதனை உண்டாக்கியது. அவன் கண்களில் கண்ணீர் பெருகியது. ஆம்! அழாமல் என்ன செய்வான்! அவனுடைய மாடும் உயர்வான உப்பளச்சேரி சாதி மாடுதான். உயிர் இருக்கும் வரையில் ஓயாது உழைக்கக் கூடியதுதான்! எலும்புந் தோலுமாக இருந்தாலும் ஓட்டத்தில் அதை வெல்ல எதனாலும் முடியாது, இருப்பினும்...... தீனி போட்டால்தானே மாடு நன்றாயிருக்கும்! வைக்கோல் போட்டே பலநாளாகுமே! வாடகை கிடைத்தால்தானே வைக்கோல் போட! அவன்தான் என்ன செய்வான்?

புகை வண்டியும் பேரிரைச்சலுடன் நிலையத்தில் வந்து நின்றது. பிரயாணிகளும் இறங்கினர். வண்டிக்காரர்கள் எல்லோரும் 'வாடகை வண்டி வேண்டுமா?' 'வாடகை வண்டி வேண்டுமா?' என்று கேட்டுக்கொண்டே கிராக்கி பிடித்தனர். கண்ணனும், 'வாடகை வண்டி வேண்டுமா? என்று கேட்டுக் கொண்டே பெரிய மனிதர்களை அணுகினான். அவன் வண்டியையும் மாட்டையும் பார்த்தவர்கள் வேண்டாம் என்றுகூடச் சொல்லவில்லை. கிராக்கி ஒன்றும் கிடைக்கவில்லையே யென்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது அந்த ஊரிலுள்ள பெரிய மனிதர் தில்லைநாயகம் நின்றது தெரிந்தது. தில்லை நாயகத்தை யணுகி, "வண்டி வேணுங்களா! எஜமான்!'' என்றான். அவரும் முன்னறிவிப்பு இன்றி ஊருக்கு வந்ததால், சொந்த வண்டி வரவில்லை. கண்ணனின் மாட்டின் ஓட்டத்தை யறிந்திருந்தும்கூட அவர் அவன் வண்டியிலேயே ஏறிக்கொள்ள முடிவு

செய்து சாமான்களை வண்டியில் ஏற்றச் சொன்னார்......கண்ணனும் இன்றைக்கு வாடகை இரண்டு ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சாமான்களை வண்டியில் ஏற்றினான். தில்லைநாயகமும் வண்டியில் ஏறிக்கொண்டார்.

கிடைக்கும் வாடகையில் தனக்கும் அரிசி வாங்கிக்கொண்டு மாட்டுக்கும் தீனி வாங்கிப் போடலாம் என்ற மகிழ்ச்சியோடு வண்டியை விரட்டினான் — தில்லைநாயகம் வீடு நோக்கி. தில்லைநாயகம் விலைவாசி உயர்வு பிரச்சினையிலிருந்து தொழிலாளி முதலாளி பிரச்சினைவரை அன்றுட அரசியல் நிகழ்ச்சிகளைப் புகுத்திக்கண்ணனோடுபேசிக்கொண்டிருந்தார். தில்லைநாயகத்தின் பேச்சுக்கு 'ஆம்' போட்டானேயொழிய, கண்ணன் சிந்தனையெல்லாம் எங்கோ பறந்து சென்றது. வண்டியும் தில்லைநாயகத்தின் வீட்டின்முன் நின்றது. வண்டியிலிருந்த சாமான்களை இறக்கி வீட்டில் வைத்துவிட்டு நின்றான, கண்ணன்.

"என்ன கண்ணு! ஏன் நிற்கிறே ..?"

"வாடகைப் பணம்..."

"வாடகைப் பணமா......? எவ்வளவு?!"

"பக்கத்திலேன்னு ...... கூடக் குறைய வாங்குவேன்; நீங்க கொடுக்கிறதைக் கொடுங்க..."

"ஏம்பா கண்ணு! ...... ஏதோ அவசரமுடையின்னு ஐந்து ரூபாய் வாங்கினியே! அதை இனனும் கொடுக்கலையே...?"

"ஆமாங்க......!',

"வாங்கி எவ்வளவோ நாளாகுதே! நீ கொடுக்கிறதுக்கே நினைக்கலையே!"

"கொடுக்கக்கூடாதுன்னு நினைக்கலேங்க...கொஞ்ச நாளா வாடகை சரியாகக் கிடைக்கலே — மாட்டுக்குத் தீனிகூட வாங்கிப் போடக் கஷ்டப்படுறேங்க......என் குடும்பம் எத்தனையோ நாளா பட்டினியாக் கிடக்குதுங்க...எப்படியும் சீக்கிரம் கொடுததிடுறேனுங்க......"

"இத்தனை நாளாக் கொடுக்காத நீயா இனிமே கொடுத்திடப் போறே? வாடகைப் பணத்தை அதில் வச்சிகிட்டு பாக்கியைச் சீக்கிரம் கொடுத்திடு"

தில்லைநாயகம் இப்படிச் சொன்னதும் கண்ணனுக்கு ஒனறுமே புரியவில்லை. அனறு பூராவும் சாப்பிடாததால் கண்ணெலலாம் மாசு பூத்தாற்போல் ஆகிவிட்டது. இப்படிச் சொல்கிறாரே, என்ன செய்வது என்றெண்ணியவன், நிலை தடுமாறி கீழே விழப்போனபோது பக்கத்திலுள்ள தூணைப் பிடித்துக் கொண்டான்.

"எஜமான்......இரண்டு நாளாப் பட்டினிங்க...நீங்க கொடுக்கிறதை வாங்கித்தான் நானும் சாப்பிடணும் ......மாட்டுக்கும் தீனி வாங்கிப் போடணும்.....இல்லேண்ணு சொல்லாமக் கொடுங்க......உங்களுக்கு கொடுக்கவேண்டியதை எப்படியாவது கொடுத்திடுறேனுங்க......"

"தும்பை விட்டுட்டு வாலை பிடிக்கச் சொல்றியா? போடா போ! இப்ப ஒண்ணும் தொந்தரவு கொடுத்துகிட்டு இருக்காதே! ஒரு தடவை சொன்னா சொன்னது தான்" என்று முடிவாகச் சொல்லி அனுப்பிவிட்டார்.

கண்ணனின் நிலை கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாததுபோல் ஆகிவிட்டது. தில்லைநாயகம் அப்படிக் கைவிரிப்பார் என்று நினைக்கவே இல்லை!

இரவு பத்து மணிக்கு மேலாகிவிட்டதால் வேறு ஒரு இடமும் பார்க்க முடியவில்லை. வெறுங் கையோடு வீடு நோக்கி வண்டியை ஓட்டினான்—இல்லை நகர்த்தினான். வீட்டில்போய் என்ன செய்வது? உண்ணுவதற்கு உணவு,...தன் தாய்க்கு மருந்து... மாட்டுக்குத் தீனி...எதற்குமே வழியில்லாத அவனுக்கு அவைகளை நினைக்கவே பயமாக இருந்தது. தான் என்ன செய்வது எனறெண்ணியபடி வண்டியை ஓட்டினான். வண்டி வந்ததும், கண்ணனைக் கண்ட அவன் மனைவி காத்தாயி, இன்று எப்படியும் வாடகைப் பணம் வாங்கி வந்திருப்பார் என றுமகிழ்ச்சியோடு, "என்னத்தான்! வாடகை ஏதாவது கிடைத்ததா? அரிசியும் தீனியும் வாங்கி வந்தீர்களா? அத்தைககு மருந்து வாங்கக் காசு மீதி இருக்கிறதா?' என்று கேட்க எண்ணியவள் கணணனின் முகத்தில் படர்ந்திருந்த சோகத்தைக் கண்டவுடன் கேட்காமலேயே இருந்து விட்டாள்.

"காத்தாயி! அம்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கு...கஷாயம் ஏதாவது போட்டுக் கொடுத்தாயா......?"

"காலையில் இருந்ததைவிடக் கடுமையாகத்தான் இருக்கு...கஷாயம் கொடுத்தேன் அதிலேயும் சரியாயில்லே......டாக்டரையாவது அழைச்சிகிட்டு வர்றீங்களா...?"

"டாக்டரா?......நம் போன்ற குடிசையிலிருப்பவர்களுக்கு வருவார்களா? அப்படியே வந்தாலும் நம்ப கிட்ட ஏது காத்தாயி பணம்......? இன்னிக்குச் சாப்பிடுறதுக்கே வாடகை கிடைக்கலே...மாடுவேற பட்டினியாக்கிடக்கு...இப்படிப்பட்ட நிலையில் டாக்டருக்கு கொடுக்க பத்து ரூபாயாவது வேண்டுமே! அதுக்கு வழியில்லேயே காததாயி"

"என்னிடத்திலே பவுன் நகை கூடக் கிடையாதே! நான் என்ன செய்வேன்? எதிர் வீட்டு ஏகாம்பரத்திடமாவது போய்க் கொஞ்சம் பணம் வாங்கி வாருங்களேன்."

"போன மாதம் வாங்கிய பணமே இன்னும் கொடுக்கலே......அப்படியிருக்கும்போது இப்ப கேட்டா கொடுப்பாங்களா?"

இப்படி, கண்ணனும் காத்தாயியும் பேசிக்கொண்டிருக்கும்போது யாரோ 'கண்ணு! கண்ணு!' என்று கூப்பிடுவது கேட்டு வெளியே போனான். கூப்பிட்டவரைப் பார்த்ததும் அவனுக்கு தூக்கி வாரிப் போட்டது. காரணம் அங்கே நின்றது அந்த ஊரிலுள்ள முக்கிய புள்ளிகளில் ஒருவர். முத்து என்று சொன்னாலே அழுத பிள்ளையும் வாய் மூடுமாம்! அந்தளவுக்கு அவர் என்றால் பயம். அவரைக் கண்டதும் 'ஏன் இந்த ஆள் இராத்திரியிலே இங்கு வந்தார்' என ஒன்றும் புரியாமல் விழித்தான். தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, 'என்ன இப்படி இராத்திரியிலே வந்தீங்க......" என்றான்.

"ஒண்ணுமில்லே கண்ணு! ஐந்தாறு மூட்டை சாமான் இருக்குது. அதைக் கொண்டுவரணும வண்டி ஓட்டிகிட்டு வர்றியா?"

"என் வண்டி பாரவண்டியில்லேங்க...சவாரி வண்டிங்க..."

"தெரிஞ்சுதான் கூப்பிடுறேன்... சவாரி வண்டிதான் வேணும்...... வாடகை குறைக்காமல் தர்றேன்."

முத்து கூப்பிடுகிறார் எனும்போது வரமுடியாது என்று கூறமுடியவில்லை. அதுமட்டுமல்ல. அவனது வறுமை, மனிதர்கள் சவாரி செய்ய வேண்டிய வண்டியில் மூட்டைகளை

ஏற்றச் சம்மதிக்கவைத்தது. 'பண மில்லையே! தாய்க்கு மருந்து வாங்க முடியவில்லையே! என்று ஏங்கிய வனுக்கு முத்துவின் வார்த்தைகள் தெம்பைத் தந்தன.

தன் வீட்டினுள்ளே புகுந்து தன் மனைவியிடம், "காத்தாயி! ஒரு கிராக்கி வந்திருக்குது...பணம் ஏதாவது கிடைக்கும், வரும்போது மருந்து வாங்கிவருகிறேன். அதுவரையில் அம்மாவைப் பத்திரமாகக் கவனிச்சிக்க" என்று ஆறுதல் கூறிவிட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தவரோடு புறப்படத் தயாரானான். இரவு நேரம் அதிகமாகி விட்டது! மருந்து எப்படிக்கிடைக்கும் என்று அவன் மனைவி சந்தேகத்தைக் கிளப்பியபொழுதும் கூட, அதைப்பற்றி நீகவலைப்படாதே காத்தாயி, எந்நேரமானாலும் டாக்டரைப் பார்த்துவிட்டு வீட்டுககு வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

நகரத்தைவிட்டுத் தெற்குநோக்கிச் செல்லும் பாதை வழியே வண்டி சென்றது. நேரமோ நள்ளிரவு! பாதையோ கல்லும் முள்ளும் நிறைந்தது! என்றாலும் வண்டி சென்றது. அடர்ந்தக் காட்டினூடே வண்டி சென்றபோது, கண்ணனின் கண்களுக்குப் பாதைகூடத் தெரியவில்லை. அதை அவன் முத்துவிடம் கூறி, விளக்கு வெளிச்சமில்லாமல் தடம் புரியவில்லை. இங்கு விளக்கேற்றிக்கொண்டால் என்ன என்று கேட்டபோதும் "விளக்கா? அதற்கும் நமக்கும் வெகுதூரமப்பா" என்று அவர் தடுத்துவிடவே எப்படியோ தட்டுத்தடுமாறி வண்டியைக் கடற்கரைக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டான்.

வண்டியை நிறுத்திவிட்டு, தன் பின்னாலே 'வா' என்று கண்ணனுக்கு தாழ்ந்த குரலில் கூறவே, கண்ணன் அவரைப் பின் தொடர்ந்தான்.

கொஞ்சத்தூரம் சென்றதும் ஒரு முட்புதரின் ஓரத்திலே தழைகளால் மூடப்பட்டுக்கிடந்த மூட்டைகளைக் காட்டி இவைகளைத்தான் நீ வண்டியிலேற்றவேண்டும் என்று உத்தரவு இடவே, கண்ணன் கொஞ்சம் தயங்கியவனாய், "இவைகளெல்லாம் என்னமூட்டைகள்" என்று முத்துவைக் கேட்டான்.

அதைப்பற்றி உனக்கேன் கவலை ...நீ சொன்னதைச் செய்" என்று முத்து சொல்லியும் கூடக் கண்ணன் தயங்கினான்.

"கண்ணா! என்னைப்பற்றிப் புரியாதவனல்ல நீ! இருந்தும் நீ ஏன் இப்படித் தயங்கவேண்டும்?"

"இல்லைங்க...நான் ஏழை...என் வண்டியில் இந்த மூட்டைகள் இருந்து போலீசார் இதைக்கண்டு பிடித்துவிட்டால்?"

"கள்ளக் கடத்தல் பொருளாயிற்றே......அதனால் கஷ்டமேதும் உனக்கு வந்துவிடுமோ என்று பயப்படுகிறாயா கண்ணா? சிஞ்சித்தேனும் அந்தக் கவலை உனக்குத் தேவை இல்லை. முத்துவின் முழுத் திறமையும் உனக்கு புரியாது போலிருக்கிறது. அவனோடு மோதிய எவனும் இன்று உயிரோடு இருந்ததில்லை யென்பதை உனக்கு விளக்கிச் சொல்ல வேண்டுமா?"

"வேண்டாங்க......இதனால் இந்த ஏழையின் வாழ்வு நசித்துப்போய் விடுமோ என்று எண்ணும்போது தான் எனக்குப் பயமாக இருக்குதுங்க..."

இந்த வார்த்தைக்கு முத்துவின் வாயிலிருந்து பதிலேதும் வரவில்லை. பலத்த சிரிப்புத்தான் வந்தது. அவன் பேசினான்; "கண்ணா உன்னுடன் கதையளக்க எனக்கு நேரமில்லை. காலம் கடத்திக்கொண்டிருக்கக் கூடிய தொழிலும் இதுவல்ல. முடியும் முடியாது என்ற இரண்டு வார்த்தைகளில் உன் பதில் இருக்க வேண்டும் என்ன சொல்கிறாய்" என்று முத்து மூர்க்கமாய்க் கேட்கவே, கண்ணன் கலங்கினான். 'சரி' என்று சொல்லுவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாத நிலை கண்ணனுக்கு ஏற்பட்டு விடவே, 'சரி' என்று சொல்லிவிட்டு மூட்டைகளைத் தூக்கிக் கொண்டுபோய் வண்டியில் ஏற்றினான். வண்டி புறப்பட்டது.

கண்ணனுக்கு இப்போது மனம் தத்தளித்தது; ஏதோ தகாத காரியத்தைத் தான் செய்வதாக அவன் எண்ணியபோது தாயின் நோயை விடத், தன்னை வருத்திக்கொண்டிருக்கும் பசியைவிட, ஏதோ ஒன்று அதிகத் துன்பத்தில் அவனை ஆழ்த்துவதை அறிந்தான். அவன் மனம் வேதனையால் தவித்தது. வண்டியில் பாக்கு மூட்டைகளை ஏற்றிய போதே அவன் நெஞ்சிலே பயங்கரப் பளுவும் ஏறிக்கொண்டது. இருந்தும் என்ன செய்ய...? முத்துவிடம் முடியாது என்று கூறிவிட்டு முத்துவின் கோபத்திற்கு ஆளாகி அவ்வூரிலே அவன் வாழ்ந்துவிட முடியுமா? முடியாது என்பதால் நடப்பது நடக்கட்டும் என்ற துணிவில் வண்டியை ஓட்டினான். அவன் நினைத்தது தவறவில்லை. நடக்கவேண்டியது நடந்தே விட்டது. காட்டிற்குள்ளிருந்துடார்ச் லைட்களுடன் ஓடிவந்தவர்கள் வேறுயாருமல்ல, போலீஸ்காரர்கள் தான்! அவர்கள் கையில் பலமாகச் சிக்கிக்கொண்டான் கண்ணன். கையிலே விலங்கு மாட்டப்பட்டது. ஆம்! கண்ணன் கையில்தான் விலங்கு மாட்டப்பட்டது. கையும் களவுமாக பிடிபட்டவன் கண்ணன் தானே!

கண்ணன் கதறினான்! தனக்கும் இந்தக் கள்ளக் கடத்தலுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. எல்லாம் முத்துவின் பேச்சை நம்பி மோசம் போய்விட்டேன், என்று அவன் எவ்வளவோ காரணங்களைக் காட்டியும் கைவிலங்கு மாறவில்லை. தன்னை இவ்வளவு மோச நிலைக்கு உள்ளாக்கிய முத்துவை அவன் கண்கள் தேடின. முத்து அங்கு இருந்தால்தானே! கள்ளக் கடத்தலில் கைதேர்ந்த முத்துவா இவன் கண்களுக்கு தெரியும் தூரத்தில் நிற்கப் போகிறான்? முத்துவின் முகம் தெரியவில்லை. ஆனால் தாயின் முகம் தன்னெதிரிலே நிற்பதுபோல் தெரிந்தது...அவன் அன்பு மனைவி காத்தாயி 'அத்தான் உங்கள் கையிலா இந்தக் கைவிலங்கு என்று கதறிக் கண்ணீர் விடுகின்ற முகம் தெரிந்தது...அல்லும் பகலும் தன்னோடு உழைத்து உருக்குலைந்து எலும்புந் தோலுமாகிவிட்ட ஒரே உயிரான அவனது ஒற்றைமாடு அவனைப் பரிதாபததோடு பார்க்கும் முகம் தெரிந்தது......அவன் கதறினான் பதறினான்...கண்ணீர் வடித்தான்......யாது பயன்......? கடுஞ்சிறைக் கம்பிகள்தான் இப்போது அவனுக்கு உறைவிடம் — உணவிடம்—உறங்குமிடம்.

★

வறுமையிலும் தியாகம்

—[பாடி-தமிழன்பன்]—

வறுமை, ஆம்! அது பலருக்கு அன்றி ஒரு சாராருக்கு மட்டுமான உரிமைப் பொருள்போலும்! அது வந்து போகும் ஒருவனைத் தன் சுய உருவத்திற்கே கொணர்ந்துவிடுகின்றது. அவ்வறுமைக் கீடாக அவன் தன்னையே கொடுத்துவிடுகின்றான். ஆம். செத்து மடிகின்றான். அந்த இறப்பு, சிலருக்கு நன்மையையும், சிலருக்குத் தீமையையும் தருவது கண்கூடு.

நான் கல்லூரி முடிந்து விடுமுறையில் சொந்த ஊர் சென்றுகொண்டிருந்தேன். என்னுடன் இன்னும் பல மாணவர்களும் அப் பயணத்தில் பங்கேற்றனர். புகைவண்டி நிலையத்தை அடைந்த யாங்கள், புகைவண்டியின் தாமதம் கருதி நிலையத்தில் காத்திருந்தோம். சக மாணவச் சகோதரர்கள் அனைவரும் சொந்த ஊர் செல்கின்றோம் என்ற களிப்பில் ஆழ்ந்திருந்தனர். ஆனல், என் உள்ளம் மட்டும் என்னவோ அவர்களையெல்லாம் விட்டு நீங்கி ஏதோ ஒரு உண்மையைக் காண்பதுபோல் நிலைய வாயிலின் ஒரு கோடியை அணுகியது.

அவண், கண்ட ஒரு நிகழ்ச்சி, என் எண்ணத்தைத் தூண்டி அன்றைய ஆட்சியின் அருமையையும் சுற்றியுள்ள உயிர்களின் தன்மையையும் அளவிடத் தொடங்கியது.

சுமார் இருபத்தெட்டு வயது இருக்கும். இயற்கையழகோடு கூடியவள் தான். வறுமையின் பெருமை அவள் பொன்னிறமேனியை மெருகேற்றியிருந்தது. எண்ணெய்கொண்டு நீவப்படாத அவள் கூந்தலில்தான்எத்தனை அழகு. கிழிந்தும் கிழியாமலுமிருந்த ஒரு தாவணி அவள் மானத்தைக் காத்தது. உணவின்மையால் அவள் உடலில் ஏற்பட்ட தளர்வு, ஒளிவதனத்தையே கொள்ளைகொண்டு தன் ஓங்கார வடிவத்தைப் படரவிட்டிருந்தது.குறுகிக் கறுத்துக் குழிவிழுந்த கன்னங்கள்; குற்றத்தையே அறிந்திராத கருவிழிக் 'கருணைக் கண்கள், நீர் காணுது வாடியனபோன்ற அவள் உலர்ந்த உதடுகள் --- இவைகளெல்லாம் வாடியழியா வறுமையின் பிரதிநிதிகள் போலும்! அவைகள் அனைத்தும் அவளிடத்துக் குடிகொண்டு வறுமையின் வளத்தைப் பறைச்சாற்றிக் கொண்டிருந்தன.

'எங்கள் நாட்டில் பசிகிடையாது; பட்டினி கிடையாது. உண்டு, உறங்கி அதனல் உவகைக்கொண்டு வாழ்கின்றோம், ஏழை எளியோர் அனைவருமே மகிழ்வுடன் இருக்கின்றனர்' என்று பலர் வீரமுழக்கம் செய்கின்றனரே! அதையும் எண்ணினேன். இந்த அவலக் காட்சியையும் கண்டேன். என் 'நா' பதில் கூறவில்லை, உள்ளம் தான் பதில் கூறியது. கண்கள் நீரைப் பெருக்கின.

காவியத்திலும் காணு அவலத்தை நான் இங்குதான் கண்டேன். அக் குழந்தை பால் உண்ணவேண்டித் தாயின் மார்பகத்தை அணுந்து வாயால் முட்டி மோதுகிறது, தோல்வியுறுகிறது. தாய்க்கு உணவு இருந்தாலன்றோ குழவிக்குப் பால் கிட்டும். அதற்குத்தான் வாய்ப்பில்லையே.குழவியின் தொந்தரவினுல் வலிபொறுக்க மாட்டாத தாய்,முகம் கூம்புகிருள் வறுமை அவளை ஆட்டிப் படைக்கிறது. குழந்தையை அடிக்கிருள்.

இது கண்ட என் மனித உள்ளமும் அடிபட்டது.உடனே என் 'பாக்கெட்'டில் கைவிட்டு இரண்டு ரூபாய் பணத்தையெடுத்து அந்த உயிர்க்களித்தேன். நண்பர்கள் சிலரும் அவ்வாறே கொடுத்துவிட்டுச் சென்றனர். அத்தாயின் அவலநிலையை எண்ணி எள்ளி நகையாடினர் ஒரு சிலர். அவர்கள்தான், இன்றைய சமுகத்தில் உதவி மகிழும் உத்தமர்கள்; கருணை பொழியும் கனவான்கள் என்று போற்றப்படுகின்றனர். அவர்கள் எத்தனை எத்தனையோ பட்டுத் துணிகளால் எல்லாம் உடலை மறைத்துக்கொண்டாலும், அதனுள்ளே ஒளிந்து மறைந்திருக்கும் அவர்கள் உள்ளம் தெரியத்தானே தெரிகிறது.

நான் என் வழியே திரும்பி நடந்தேன். நிலையத்தைவிட்டும் நீங்கினேன். ஆனல் ஒன்றுமட்டும் என் இதயத்தைவிட்டு நீங்கவில்லை. ஒருவருக்கொருவர் உறுதுணையாக அத்தாயும் சேயும் வாழும் வாழ்க்கை என் மனத்தை உலுக்கியது. இயற்கை, அக்குழந்தையின் மூலம் அவளுக்கு அருள் புரிகிறது. அதைக் கொண்டு அவள் 'தெருவாழ்க்கை' வாழ்கிருள். எண்ணவும் துணியாத துக்கம் என் தொண்டையை அடைத்தது. என்றுதான் இவ்வறுமைப்பேய் அழிந்தொழியுமோ? உண்மை மகிழ்வு மலருமோ?

காலத்துளிகள் ஒன்று குவிந்து, சில மணிகளாகவும், சில நாட்களாகவும் உருப்பெற்று உருண்டோடி மறைந்தன.

விடுமுறை கழிந்து மீண்டும் கல்லூரி நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். புகைவண்டியை விட்டு இறங்கியதும் ஆங்கொரு பக்கத்திலிருந்த மக்கள் திரளைக் கண்டேன். மனம் இடந்தரவில்லை . . . . , ஓடிச் சென்று உசாவினேன். ஐயகோ! அன்று யான் கண்ட ஏழ்மையின் எழிலுருவம்; வறுமையின் வடிவம், மாய்ந்து கிடந்தது. மடிந்து கிடந்த மாதா மரணத்தை அணைத்துவிட்டாள். அருகிலிருந்தோர் கூறியது இதுதான் . . . .

'பிறரை அண்டிப் பிழைத்து அரவமில்லாது திருடிப் பிழைக்கும் பிழைப்பிற்காளான தன் கணவனை அன்பால் கண்டித்தாள். அறநெறிகளைக் காட்டினுள். அநீதிக் கறையைப் போக்க அன்புக் கண்ணீர் வடித்தாள். ஆனல் அவள் தோல்வியுறத்தான் செய்தாள் கொண்ட கணவனே தன்னை உதாசீனப்படுத்தி வேறொருபெண்ணுடன் உறவுகொண்டுவிட்டதைஅறிந்தாள். அறிவுரைகள் பல கூறினுள். அதிலும் தோல்வியே கண்டாள். தன் குடும்ப நிலையைப் பிறரிடம் கூறிக் கணவனுக்கு அவமானம் தேடித்தர விரும்பவில்லை அந்தக் கற்புக்கரசி. உள்ளத்தே புதைத்து உண்மையை மறைத்துக்கொண்டாள். வறுமை நிலையிலும் அவள்தம் தமிழுள்ளம் வரம்புமுறையை நாடியது, ஒருத்திக்கு ஒருவன் என்ற தீந்தமிழ்ப் பண்பை அறிந்த அவள், கணவன் மனத்தில் நிறைவைத்தர நாடினுள். தன் இல்வானில் ஒரு நிலவைமட்டும் உலவவிட்டுத் தான் மறைந்துவிட்டாள். ஆம்! புகைவண்டித் தடத்தில் வீழ்ந்து தன்னை மாய்த்துக்கொண்டு விட்டாள்.'

இறவாது இறந்துவிட்ட அந்தத் தாயின் மார்பகத்தில் கிடந்து புரண்ட அவள் குழந்தையையெடுத்து என் தோளின்மீது அணைத்துக்கொண்டேன். மனச்சுமையையெல்லாம் கண்ணீராகப் பெருக்கினேன். வறுமையிலும் மானங் காத்துத் தியாகம் புரிந்த அந்த தமிழ்ச் செல்வியின் தனிப்பெருமையை எண்ணினேன். இறுமாப்புக் கொண்டேன் செந்தமிழ்த்தாயின் பெருமை காத்த செருக்கு அவள் முகத்திலே படர்ந்திருந்தது.

✻

"வாழவைத்தவர்"

—[ம. சச்சிதானந்தம்]—

கரிகாலன்:

திருமணம்! முன்பின் அறிந்திராத பெண்ணுக்கும் ஆணுக்கும் திருமணம்! எனக்கும் மணிமேகலைக்கும் திருமணம்! நான் சமுதாயத்தைச் சீர்திருத்த விரும்பும் சீர்திருத்தவாதி! சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க விரும்புகிறேன்! ஆனால், நான் என் வாழ்க்கையில் கலப்புத் திருமணம் செய்துகொண்டு சமுதாயத்திற்கு முன்னோடியாக வாழ எண்ணினேன்! சொல்லும் வண்ணம் நடக்கப் பயப்படும் கோழையல்ல நான்! காதலிக்கவில்லை! ஆதலால் கலப்புத் திருமணம் செய்துகொள்ள இயலவில்லை! திருமணம் நடந்து முடிந்துவிட்டது! அவள் அழகோவியம்தான்! ஆடவரைக் கவரும் கட்டழகுப் பெட்டகம் அவள்! எங்கோ இருந்த அவளுக்கும் எனக்கும் திருமணம்! பின்னர் இருவரிடமும் ஏற்படும் உறவினை என்னென்பது!

நான் நெறியோடு வாழ்ந்துவருபவன்! நெறியோடு வாழமுடியுமா? என்பர் தங்களிடத்தில் நம்பிக்கையில்லாதவர்கள்! மனிதனால் இயலாதது ஒன்றுமில்லை என்பேன்! முதல் இரவு! இன்ப இரவு! போனால் திரும்பிவர மனமிருக்காது. ஏதேதோ நண்பர்கள் கூறுகிறார்கள்! யாரோ ஒருவர் என் காதுகளில் ஏதோ கூறினார். சுவையாகத்தான் இருக்கிறது! இன்பம்! இன்பம்! என்கிறார்களே, அதைப்பற்றி அனுபவித்துணரச் செல்கிறேன். நானும் இளைஞன் தானே! ஆசை இருக்காதா? கதவைத் திறந்தேன். அறையினுள் சென்று கதவைத் தாழிட்டேன். திரும்பிய நான் அதிர்ச்சியுற்றேன். யார் ஓடிவந்து என்னை அணைத்துக் கொள்வாள் — ஒய்யாரமாக என்று எண்ணினேனோ அவள்! யார் எனக்கு இன்ப உலகத்தைக் காட்டப்போகிறாள் என்று கனவு கண்டேனோ, அவள்! மெத்தையில் படுத்து விம்மிக்கொண்டிருந்தாள்!

அவளருகே சென்று ஏன் விம்முகிறாய், என்று கேட்டேன். அவள் என் இதயவேதனை கண்ணீராகக் கொட்டுகிறது என்றாள். வேதனை என்ன? நான் அறியலாமா என்றேன். சொன்னால் என் வேதனை தீர்ந்துவிடுமா என்றாள். என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன் என்றேன். நான் சொல்வது உங்களுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கலாம்! ஆதலால் உங்களது இதயத்தை எதையும் தாங்கும் இதயமாக மாற்றிக்கொள்ளுங்கள் என்றாள். எதையும் தாங்கும் இதயத்தை நான் பெற்றவன்; ஆதலால் நான் எதையும் தாங்குவேன் சொல் என்றேன். "நான் மதிவாணனைக் காதலித்தேன்! அவரும் என்னைக் காதலித்தார். இருவருடைய காதலும் வளர்ந்தது. எங்களது காதலுக்கு இடையே சாதிவெறி குறுக்கிட்டது. எனது தந்தையார் உங்களுக்கு என்னைத் திருமணம் செய்துகொடுத்தார். என்வாழ்வை அழித்துவிட்டார் என் தந்தை!" என்று அழுதாள்!

நான் சிறிது நேரம் சிந்தித்தேன்! அவள் காதுகளில், என் எண்ணத்தை அறிவித்தேன்! சம்மதமா? என்று கேட்டேன். சம்மதம் என்றாள். அமைதியாகப் படுத்திருக்கச் சொல்லிவிட்டு, அறையைவிட்டு அகன்றேன். எப்படியெல்லாம் என் திட்டத்தைச் செய்து முடிப்பது என்று சிந்தித்தவாறு வெளியில் படுத்துறங்கினேன்.

மணிமேகலை:

என் வாழ்வில் இனியேது மறுமலர்ச்சி என்று எண்ணியிருந்த எனக்கு வாழ்வைத் தருகிறேன் என்று சொன்னார் கரிகாலன். ஊரில் பெரிய பகுத்தறிவுவாதி கரிகாலன்! இல்லையென்று நான் சொல்லவில்லை! ஆனால் நான் கண்டிருக்கிறேன் பலரை! மக்களிடையே சீர்திருத்தம் பேசுகின்ற பலர் தங்களுடைய வாழ்வில் கோழையாகிவிடுகிறார்கள்! அதைப் போல இவரும் இருப்பாரோ என்று எண்ணினேன்! அவர் தூய்மையான இதயம் படைத்தவர்! பகுத்தறிவுச் சிங்கம்! என்பதை உணர்ந்தேன்! இல்லையென்றால் அவர் இப்படிப்பட்ட எண்ணத்தை என்னிடம் துணிந்து சொல்வாரா? அவர் சொல்லியதைக் கேட்டு முதலில் பயந்தேன். பிறகு வேறுவழியில்லாது ஒப்புக்கொண்டேன். நாங்கள் திருமண விலகல் செய்துகொண்டோம்! ஊர் ஏசிற்று! பின் எனக்கும் நான் விரும்பிய மதிவாணனுக்கும் கரிகாலனே முன்னின்று திருமணத்தை நடத்தினார்! சாதிவெறி பிடித்தவர்கள் எங்களைவிட, எங்களுக்கு வாழ்வளித்த வள்ளல் கரிகாலனை ஒழித்துவிடத் திட்டமிட்டார்கள். கரிகாலன் இந்த எதிர்ப்பைக் கண்டு அஞ்சவில்லை! என் துணைவருக்கு மாற்றலாக, கரிகாலனிடம் விடை பெற்றுக்கொண்டு வேற்றூர் சென்றோம.

மதிவாணன்:

பாவம்! கரிகாலனைப், பைத்தியக்காரன் கட்டிய மனைவியை மற்றவனுக்கு கொடுத்துவிட்டவன் என்று ஊர் ஏசிற்று! சாதி ஆச்சாரத்தை அழித்துவிட்ட சண்டாளன் என்று ஓங்காரக் கூச்சலிட்டார்கள் ஊர்ப் பெரியவர்கள். சீர்திருத்தமாம் சீர்திருத்தம். கரிகாலனை ஒழித்துக் கட்டுங்கள்! இல்லையேல் ஆச்சாரம்! ஆண்டவன் பக்தி! அழிந்துவிடும்! ஊர்ப் பெரியவர்கள் கூறினார்கள். பிறர் வாழ்விற்காகத் தன் வாழ்வைத் தியாகம் செய்த கரிகாலன் இதையெல்லாம் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை! இந்த நேரத்தில்தான் எனக்கு மாற்றல் வந்தது. நான் கரிகாலனையும் எங்களோடு வந்துவிடுங்கள் என்றேன். எதிர்ப்பைக் கண்டு அஞ்சுவது கோழைத்

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

தனம்! சீர்திருத்தம் பேசுகின்ற நமக்கு எதிர்ப்பு எழுவது இயற்கை! அதை எதிர்த்து அழிப்பதுதான் அறிவுடைமையே தவிர, பயந்து ஓடி விடுவதல்ல! என்றார் கரிகாலன். நாங்கள் வேற்றூர் சென்றுவிட்டோம்! சின்னாட்களுக்குப் பின்னர் செய்தித்தாள் படித்த நான் திடுக்கிட்டேன். அதில் கரிகாலனைக் காலிகள் அரிவாளால் வெட்டிப் படு காயப்படுத்தினார்கள்! படுத்த படுக்கையில் கரிகாலன்! என்று செய்தி இருந்தது. பதறிய நானும் என் துணைவியுடன் எங்கள் ஊருக்கு பயணமானேம்! மருத்துவமனைகுச் சென்றேம். அங்கே எங்களை வாழ வைத்த பெரியார் கரிகாலன் கட்டு களோடு கிடந்தார்! கதறியழுதோம்! நாட்டிற்காகப் பாடுபடும் நல்லவர்களுக்கு இந்நாடு நல்கும் நன்றியுடைமை இதுதானா என்று எண்ணிக் கதறினேன்!

ஊர்ப் பெரியவர்கள் என்ற போர்வையில் சுற்றித்திரியும் ஊதாரிக் கும்பல் கரிகாலனை, அவருடைய கருத்தோடு மோத வக்குவகையற்றவர்கள் காலிகளைக்கொண்டு தாக்கியிருக்கிறார்கள். ஒருமாதத்தில் உடல் நலமுற்றார். ஆனல் அவர் தன்னுடைய ஒரு காலை இழந்தார். அவர் உடலெல்லாம் வடுக்கள். அழகிய முகம் வடுக்களால் அழகிழந்து காட்சியளித்தது. அவரைக் கண்டால் எனக்குக் கண்களில் கண்ணீர் வருகிறது. ஒரு காலை இழந்த கரிகாலன் கட்டையின் உதவியால் நடந்து நாட்டுமக்களுக்கு இன்னும் தீவிரமாகத்தொண்டாற்றி வருகிறார். அவரைப் பார்த்து யாராவது படு பாவிகள் இத்தோடு விட்டார்களே சாகடிக்காது என்று அனுதாபப் பட்டால், அதற்கு அவர், நான் என் உயிரை என் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தரவேண்டும் என்று தானே என்னவோ அந்த நல்லவர்கள் என் உயிரைப் பறித்துக் கொள்ளவில்லை. அதற்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். என்று சொல்லுகிறார்.

எங்களை வாழவைத்த அவர் வாழ்வு இப்படியா முடியவேண்டும்! எப்படியெல்லாம் அவருடைய பெற்றேர்கள் தன் மகன் வாழவேண்டும் என்று கனவுகண்டார்களோ, அந்த இன்பக் கனவுகள் தூள்தூளாகி விட்டனவே! எங்களை வாழவைக்க அவர் தன் வாழ்வையே கொடுமைக்கு ஒப்படைத்துவிட்டார்! எங்களது வாழ்வில் ஒளியேற்றிய அந்த உத்தமரை நினைத்தால் கண்ணீர் அருவியெனக் கண்களிலிருந்து கொட்டுகிறது

✲

அறிக்கை:—

"திராவிடநாடு"

1.	வெளியாகும் இடம்	...	86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
2.	வெளியிடும் நாட்கள்	...	வாரம் ஒருமுறை
3.	அச்சிடுவோரின் பெயர்	...	சி. என். அண்ணுதுரை
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
4.	வெளியிடுவோர் பெயர்	...	சி. என். அண்ணுதுரை
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
5.	ஆசிரியர் பெயர்	...	சி. என். அண்ணுதுரை
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்
6.	பத்திரிக்கையின் உரிமையாளர்களுடைய பெயர்களும், முகவரியும் அல்லது பத்திரிகையில் ஒரு சதவிகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின் பெயர்களும் முகவரியும்		சி. என். அண்ணுதுரை 86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.

என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்த மட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று சி. என். அண்ணுதுரையாகிய நான் அறிவிக்கிறேன்.

10—3—'63 (ஒப்பம்) சி. என். அண்ணுதுரை.
வெளியிடுவோர்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.